# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2024 மே 16-31 தொகுதி 22 இதழ் 18 விலை ரூ:10 ஆண்டு சந்தா ரூ:200



# சர்வாதிகாரி வீழ்கிறார்; அவரைத் தூக்கியெறிவோம்!

# இககமாலெ) போட்டியிடும் தொகுதி வேட்பாளர்கள்

### தோழர் சஜல் குமார் தே

மேற்கு வங்கத்தின் பர்தமான் மேற்கு (எஸ்சி) மக்களவை தொகுதியில் தோழர் சஜல் குமார் தே போட்டியிடுகிறார். அவர் தற்போது புரட்சிகர இளைஞர் கழகத்தின் மாநிலத் தலைவர். பள்ளி ஆசிரியராக பணிபுரியும் தோழர் சஜல், அரசாங்க வேலைகளுக்கு ஆளெடுப்பதில் நடைபெற்ற முறைகேட்டின் காரணமாக, அதில் சேர முடியாமல் தவிப்பவர்களின் போராட்டத் தலைவர்களில் ஒருவர். விவசாய தொழிலாளர்கள், பழங்குடியினர், ஒடுக்கப்படுகிற, விளிம்பு நிலை சமூகத்தினர் ஆகியோரை அமைப்பாக்குகிற, பரவலாக அறியப்பட்ட ஒரு செயல்வீரர். கிராமப்புற பெண்களும் விவசாயத் தொழிலாளர்களும் நுண்நிதி நிறுவன கடனிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்ற இயக்கத்தையும் தலைமை ஏற்று நடத்துகிறார். பர்தமான் மேற்கு தொகுதியில் பல பத்தாண்டுகளாக விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் மத்தியில் சிபிஐஎம்எல் கட்சி வலுவான ஆதரவை பெற்றுள்ளது.

### தோழர் பிரகாஷ் ஹிகாகா

ஒடிசாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களில், கட்சி தனித்துப் போட்டியிடுகிறது. மற்ற தொகுதிகளில் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரிக்கிறது. சிபிஐஎம்எல் கட்சி தோழர் பிரகாஷ் ஹிகாகா அவர்களை கோராபுட் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளராக நிறுத்தியுள்ளது. மேலும், ஐந்து சட்டமன்ற தொகுதிகளிலும் போட்டியிடுகிறது. சத்யாவதி சட்டமன்ற தொகுதியில் அசோக் பிரதான், குனுப்பூரில் அனசிமா சபர், பிஸ்ஸம் கட்டாக்கில் ராம் சந்திரா பஸ்கா, லக்கிம்பூரில் ராஜேஷ் மாதங்கி, ராயகடாவில் கிருஷ்ணா பல்கா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

### தோழர் பி பங்கார் ராவ்

காக்கிநாடா நாடாளுமன்ற தொகுதியில் சிபிஐஎம்எல் மத்திய கமிட்டி உறுப்பினர் தோழர் பி பங்கார் ராவ் போட்டியிடுகிறார்.




### சட்டமன்றத் தேர்தல்

ஆந்திர பிரதேச சட்டமன்றத் தேர்தல்களில் ஐந்து தொகுதிகளில் சிபிஐஎம்எல் கட்சி தனது வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. ஸ்ரீகாகுளம் மாவட்டத்தின் பலாசா தொகுதியில் பி காமேஸ்வர் ராவ், அனகாப்பள்ளி மாவட்டத்தின் சோடவரம் தொகுதியில் எஸ் கணேசன், குண்டூர் மாவட்டத்தின் தெனாலியில் சிஹெச் கோபால், காக்கிநாடா மாவட்டத்தின் துனி தொகுதியில் வி சிவா, பிரதிப்பாடு தொகுதியில் ஒய் அர்ஜுன் ராவ் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

# மனோஜ் மன்சில் சிறையிலிருந்து விடுதலை!

## எம்.எல்.ஏ பதவி பறித்த ஆணைக்கு இடைக்கால தடை விதிக்கப்பட வேண்டும்!

ஏகியோன் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சிபிஐஎம்எல் தோழர் மனோஜ் மன்சிலுக்கு பாட்னா உயர்நீதி மன்றம் திங்களன்று பிணை வழங்கியது.

பட்காவ் வழக்கில் மாவட்ட நீதிமன்றம் மனோஜ் மன்சில் மற்றும் 22 பேருக்கு பிப்ரவரி 13 அன்று ஆயுள் தண்டனை வழங்கியது. அதனைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து மனோஜ் மன்சில் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இந்தத் தீர்ப்புக்கு எதிராக பட்னா உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

"பாசிச மோடி ஆட்சியை அரியணையிலிருந்து அகற்றிட நடக்கும் போருக்கு, ஷாஹாபாத், மகத் தொகுதிகளில் போட்டியிடும் இந்தியா வேட்பாளர்களின் தீர்மானகரமான வெற்றியை உறுதி செய்கிற போராட்டத்திற்கு தோழர் மனோஜ் மன்சிலின் விடுதலை பெரும் உத்வேகத்தை அளிக்கும். போராடுவோம், வெற்றி பெறுவோம்!" என சிபிஐஎம்எல் பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் கூறினார்.

பட்னா உயர்நீதி மன்றத் தீர்ப்பை வரவேற்றுப் பேசிய சிபிஐஎம்எல் பீகார் மாநிலச் செயலாளர் தோழர் குணால் மிக விரைவிலேயே மற்ற 22 தோழர்களுக்கும் பிணை வழங்கப்படும், நீதி நிலை நாட்டப்படும் என நம்பிக்கை தெரிவித்தார்.

தோழர் மனோஜ் மன்சிலுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் கீழ் நீதிமன்றத்தின் ஆணையான, பதவி பறித்த ஆணைக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டுமென்ற வழக்கு நிலுவையில் உள்ளது. நீதிமன்றத்தில் அதற்கான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏகியோன் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடந்து கொண்டிருப்பதால், பதவி பறித்தலுக்கு எதிரான தடைமனு மீது, இனிமேலும் எவ்வித தாமதமும் செய்யாமல், உயர் நீதிமன்றம் முடிவெடுக்கும், நீதி நிலை நாட்டப்படும் என தோழர் குணால் நம்பிக்கை தெரிவித்தார்.

- மத்தியக் கமிட்டி
சிபிஐஎம்எல்

மாலெ தீப்பொறி

இருவார இதழ்
*2024 மே 16 - 31*
தொகுதி 22 இதழ் 18

முதன்மை ஆசிரியர்
**சங்கர் .வீ**

ஆசிரியர்
**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு
**பழ. ஆசைத்தம்பி**
**பாலசுந்தரம்**
**அ. சந்திரமோகன்**
**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்
**சொ. இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com

# தமிழ்நாடு போலீஸ் ஆட்சியாகாமல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்

மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் செய்த சாதனைகள் பல என பெருமைபட சொல்லிக் கொள்ளும் அதேவேளையில், தமிழ்நாட்டில் தடுத்து நிறுத்தப்பட வேண்டிய பல பிரச்சனைகளும் உள்ளன. அதில் முதன்மையானது பட்டியலின மக்கள் மீதான தொடர் தாக்குதல்கள் நான்குநேரி சின்னத்துரை மீதான சாதியாதிக்க வெறித் தாக்குதல் மாநிலத்தையே உலுக்கி, தலைகுனியவைத்தது. தென் மாவட்டங்களில் நடந்த தலித் மக்கள் மீதான தொடர் தாக்குதல்களுக்கு, படுகொலைகளுக்கு நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதையொட்டி ஒரு சிறு இடைவேளை காணப்பட்டது. தேர்தல் முடிந்த உடனேயே தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம், புளியங்காலனியைச் சேர்ந்த தலித் இளைஞர் படுகொலை செய்யப்பட்டார். யாராவது ஒரு தலித்தை கொலை செய்யவேண்டும் என்பதற்காகவே இந்தக் கொலை நடத்தப்பட்டதாகச் செய்திகள் வெளியாகின. வேங்கை வயல் குற்றவாளிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் அதே புதுக்கோட்டை மாவட்டம், சங்கம் விடுதி ஊராட்சி, குருவாண்டான்தெரு கிராமத்தில் குடிநீர்த் தொட்டியில் சாணம் கரைக்கப்பட்டது. சேலம் மாவட்டம் தீவட்டிப்பட்டியில் கோயிலுக்குள் செல்ல தலித் பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதன் காரணமாக எதிர்ப்புகள், தலித் மக்கள் மீது தாக்குதல்கள், வழக்குகள். திருநெல்வேலி மாவட்டம் நான்குநேரி அருகே பட்டியிலின பெண் ஆசிரியர் ஒருவரை ஆதிக்க சாதி ஆசிரியர்கள் தாக்கினர். திருப்பூர் மாவட்டம், குமாரபாளையத்தில் அருந்ததியர் சமூக மாணவர்களை கழிவறையைச் சுத்தம் செய்ய வைத்த ஆசிரியர்கள். உடுமலைப்பேட்டையில் தலித் சிறுமிகளை வன்புணர்வு செய்த கொடூரம், இப்படித் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன சாதியாதிக்கக் கொடுமைகள். இதைத் தடுக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன? இரண்டாவது, மனித உரிமை மீறல்களும் காவல்துறையின் அத்துமீறல்களும். நெல்லை மாநகரத்தில் சமூக ஆர்வலர் பெர்டினட் ராயன், தகவல் அறியும் சட்டத்தின் மூலம் சிலரின் ஊழல்களை, முறைகேடுகளை வெளிக் கொண்டு வந்தார் என்பதற்காக அவர் மீது கொலை வெறித் தாக்குதல். காவல்துறையின் மனித உரிமை மீறல்களைப் பார்க்கும் போது, அது அரசின் கட்டுப்பாட்டிலுள்ள அமைப்புதானா அல்லது தனித்தியங்கும் அமைப்பா என்கிற கேள்வி எழுகிறது. பல் பிடுங்கி பல்வீர் சிங், காவல்துறை பாதுகாப்புடன் நீதிமன்றம் வந்து செல்கிறார். சாத்தான்குளம் சம்பவம் போல் பல காவல் கொட்டடிச் சித்திரவதைகள் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. சமீபத்தில் சவுக்கு சங்கரும் அவரைப் பேட்டி எடுத்த பெலிக்ஸ் ஜெரால்டும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். சவுக்கு சங்கர், பெண் காவலர்களைப் பற்றிப் பேசிய கருத்துக்களும்

தொடர்ச்சி 7ஆம் பக்கம்...



# தோழர் திபங்கர் - நேர்காணல்

**[மூத்த இதழியலாளர் ஊர்மிலேஷ் அவர்களுக்கு பீகார் அரசியல், தேர்தல் நிலவரம் குறித்து சிபிஐஎம்எல் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் அவர்கள் அளித்த நேர்காணல்]**

**ஊர்மிலேஷ்**

*இந்தி பேசும் மக்கள் வாழும் பகுதிகளில், குறிப்பாக பீகார், இடதுசாரி கட்சிகளுக்கான செல்வாக்கு மிக்க பகுதியாக இருக்கிறது. பீகாரிலும் நாடு தழுவிய அளவிலும், முக்கிய இடதுசாரி கட்சியாக, அரசியல் செல்வாக்கு பெற்ற, ஆற்றல் நிறைந்த கட்சியாக சிபிஐஎம்எல் திகழ்கிறது. இங்கே அது சக்தி வாய்ந்த முறையில் செயல்படுவது மட்டுமல்ல, இந்தியா கூட்டணியின் அங்கமாகவும் செயல்படுகிறது. 40 தொகுதிகள் இருக்கும் பீகாரில், சிபிஐஎம்எல் ஒரு ஆற்றல் மிக்க சக்தியாக செயல்பட்டு வருகிறது.*

*நடந்து கொண்டிருக்கும் மக்களவைத் தேர்தல் பிரச்சனைகள் குறித்து உரையாட சிபிஐஎம்எல் விடுதலை கட்சியின் பொதுச் செயலாளர் திபங்கர் அவர்கள் நம்முடன் இருக்கிறார்.*

**இந்தியா கூட்டணியின் பீகார் அவதாரமான மகா கூட்டணியில் நீங்கள் இருக்கிறீர்கள். உங்களுக்கு 3 தொகுதிகள் மட்டுமே கிடைத்திருக்கிறது. அது பற்றி உங்களுக்கு மகிழ்ச்சிதானா? அல்லது அது மிகவும் குறைவு எனக் கருதுகிறீர்களா?**

இது எங்கள் கட்சி குறித்த விசயம் மட்டுமல்ல. பீகாரில் பலரும் மாலெ கட்சிக்கு மிகவும் குறைவான தொகுதிகளே கிடைத்திருக்கிறது எனச் சொல்கிறார்கள். மாநிலத்தில் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர் எண்ணிக்கை அடிப்படையில் பார்த்தால், காங்கிரசுக்கு 19 எம் எல் ஏ க்கள் இருந்தார்கள். இருவர் பிஜேபிக்கு சென்று விட்டார்கள். 17 பேர் மட்டுமே இருக்கிறார்கள். 9 தொகுதி கிடைத்திருக்கிறது. எங்களுக்கு 12 எம்எல்ஏக்கள் இருக்கிறார்கள். ஆனால், 3 தொகுதிதான் கிடைத்திருக்கிறது. விகிதாச்சாரப்படி பார்த்தால், காங்கிரசுக்கு 2:1 என்ற அடிப்படையிலும் எங்களுக்கு 4:1 என்ற அடிப்படையிலும் தொகுதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. கடந்த சட்டமன்றத் தேர்தலில், மகா கூட்டணியிலேயே, அதிக தாக்கும் திறன் (ஸ்ட்ரைக் ரேட்) பெற்ற கட்சியாக எமது கட்சிதான் எழுந்து வந்திருக்கிறது. எனவே, வழங்கப்பட்ட தொகுதிகள் மிகவும் குறைவுதான். ஆனாலும், இதை நாங்கள் பெரிதுபடுத்தவில்லை. பாசிச எதிர்ப்புப் போராட்டம், பிஜேபியை தோற்கடிப்பது என்கிற ஒரு மாபெரும் அரசியல் கடமையை முன்னிறுத்தி, தொகுதிப் பிரச்சனையை பெரிதுபடுத்தாமல், மக்களிடமே அதை விட்டுவிட்டோம்.

**உண்மைதான். ஒட்டுமொத்தத்தில் மாலெ கட்சி தாக்கும் திறனில் இரண்டாவது இடத்தில் இருந்தது. இம்முறை மக்களவைத் தேர்தலிலும் பிஜேபியை வீழ்த்திடுவதில் அதே போல செயல்பட முடியும் எனக் கருதுகிறீர்களா?**

கண்டிப்பாக. அதே போல செயல்பட முடியும் எனும் நம்பிக்கை இருக்கிறது. பீகார் பற்றிப் பேசும்போது பலரும் 2019 ஐ ஒப்பிடுகிறார்கள். 2019 ஒரு வழக்கத்துக்கு மாறான தேர்தல். 2020 சட்டமன்றத் தேர்தலைத்தான் ஒப்பிடுவதற்கான அடிப்படையாகக் கொள்ள வேண்டும். பீகாரோடு, ஜார்க்கண்டையும் சேர்த்து, ஒன்றுபட்ட பீகார் என எடுத்துக் கொண்டால், மொத்தம் 54 (40+14)

தொகுதிகள் இருக்கின்றன. இதில் தேசிய ஜனநாயக கூட்டணி 2019ல் 51 (39+12) தொகுதிகளில் வெற்றி பெற்றது.

ஆனால், 2019 இறுதியில் ஜார்க்கண்டில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் பிஜேபி தோல்வி அடைந்தது. பிஜேபி தலைமையிலான மாநில அரசாங்கம் பதவி விலகியது. ஓராண்டுக்குப் பிறகு, 2020ல், கொரோனா காலத்தில், பீகாரில் தேர்தல் நடந்தது. அப்போது எதிர்க்கட்சிகள் கிட்டத்தட்ட பெரும்பான்மையைத் தொட்டுவிட்டன. கிட்டத்தட்ட பாதிக்குப் பாதி தொகுதிகளில் எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்றன. 2020 நிலைமையிலிருந்து, பின்னோக்கிச் செல்வதல்ல, முன்னேறிச் செல்ல வேண்டும் என முயற்சிக்கிறோம்.

இடைப்பட்ட காலத்தில், நிதிஷ் எங்களோடு வந்தார். மீண்டும் திரும்பிச் சென்று விட்டார். இந்தியா கூட்டணி, எதிர்க் கட்சி ஒற்றுமை உருவாவதில் நிதிஷ்-க்கும் ஒரு பங்கு இருக்கிறது. நிதிஷ் போய்விட்டால், எதிர்க் கட்சி ஒற்றுமையும் சிதைந்து விடும் என சிலர் கருதினர். ஆனால், அது தலைகீழாக நடந்திருக்கிறது. ஜார்க்கண்டில் ஹேமந்த் சோரன் கைது, பீகாரில் நிதிஷ் குமார் அடித்த அந்தர் பல்டி - இந்தப் பின்னணியில் இரண்டு மாநிலங்களிலுமே தேசிய ஜனநாயக கூட்டணிக்கு எதிரான சூழல், இந்தியா கூட்டணிக்கு ஆதரவான சூழல் உருவாகி இருக்கிறது.

தேசிய ஜனநாயக கூட்டணிக்கு எதிரான சூழல் இருந்தாலும், பிஜேபி க்கு பிரச்சனை ஏதுமில்லை என சிலர் கருதுகின்றனர். அது அப்படியல்ல என நான் கருதுகிறேன். தேசிய ஜனநாயக கூட்டணிக்கு எதிராக சூழலில் பிஜேபியும் பாதிக்கப்படும், பிஜேபி அதிலிருந்து தப்ப முடியாது என நான் கருதுகிறேன்.

ஜேடியு மற்றும் லோக் ஜன்சக்தி கட்சிகளுக்கு அதிக வீழ்ச்சி இருக்கும்தான். ஆனால், பிஜேபியும் அத்தகைய வீழ்ச்சியிலிருந்து தப்ப முடியாது. 2020ல் நாங்கள் எவ்வளவு வெற்றி பெற்றோமோ அதிலிருந்து மேலும் முன்னேறிச் செல்வோமே தவிர, பின்னோக்கிச் செல்ல மாட்டோம் என உறுதியாக நம்புகிறேன்.

**ஆர் எஸ் எஸ் அடித்தளம், பணபலம், அரசு அதிகார பலம் எல்லாம் பிஜேபிக்கு சாதகமாக இருக்கிறது என்கிறார்கள். பிஜேபியிடம் இந்து ராஷ்ட்ரா என்கிற அரசியல் லட்சியம் இருக்கிறது. அதில் ஜேடி யு, எல்ஜேபியும் உள்வாங்கப்பட்டிருக்கிறது. பிஜேபிக்கு என்ன வாக்கு வங்கி இருக்கிறதோ அதை ஜேடியு வும் எல்ஜேபியும் அதிகப்படுத்துகிறது. அப்படி இருக்கும் போது நிதிஷ் அரசியல் பல்டி அடித்ததனால் அவர் மட்டுமல்ல, பிஜேபியையும் அது பாதிக்கும் என்பதற்கு நீங்கள் சொல்லும் குறிப்பான காரணம் என்ன?**

கடந்த தேர்தலில் பீகாரில் பிஜேபி 17 தொகுதிகளில் வெற்றி பெற்றது. அந்த வெற்றி பிஜேபியின் சொந்த அடித்தளத்தின் அடிப்படையில் கிடைத்ததல்ல. புல்வாமா தாக்குதல் சூழலில் கிடைத்தது. அதைக்கூட விட்டுவிடுவோம். அத்தகைய வெற்றிக்கு அதன் கூட்டணி ஒரு முக்கிய காரணம். பிஜேபிக்கு பாரம்பரிய செல்வாக்கு இருந்த பட்னா போன்ற ஒரு சில பெரிய நகரங்களை விட்டுவிட்டால், அதற்கு வெளியே பிஜேபிக்கு அத்தகைய ஒரு பாரம்பரிய அடித்தளம் இருந்ததில்லை. அப்படி பிஜேபி தனது அரசியல் லட்சியத்தை வைத்துக்கொண்டே தேர்தலில் ஜெயிக்க முடியும் என்றிருந்தால், நிதிஷை உடைத்து வெளியே கொண்டுவர வேண்டிய அவசியம் பிஜேபிக்கு ஏன் வந்தது? நிதிஷை உடன் சேர்த்துக் கொள்வதன் மூலம் ஒரு சுமையையும் சேர்த்துக் கொள்கிறோம் என்பது பிஜேபிக்கும் தெரியும். அவர்களும் லாப - நஷ்ட கணக்கு போட்டுப் பார்த்திருப்பார்கள். அதில் நஷ்டம் குறைவாகவும் லாபம் அதிகமாகவும் கிடைப்பதாக கணக்கிட்டிருப்பார்கள். அதன் காரணமாகவே, நிதிஷைத் தங்களோடு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், மெல்லமெல்ல பிஜேபிக்கு இப்போது புரிகிறது; வீழ்ச்சி ஜேடியுவுக்கு மட்டுமல்ல, பிஜேபிக்கும் தான் என்பது. அது விகிதாச்சார அடிப்படையில் பிஜேபிக்கு சற்று குறைவாகவும் ஜேடியு, எல்ஜேபிக்கு அதிகமாகவும் இருக்கலாம்.

**மகா கூட்டணியில் மிகப்பெரும் கட்சி ஆர்ஜேடி. அதனிடம் மக்கள் அடித்தளம் இருக்கிறது. யாதவர் - முஸ்லீம் ஆதரவு அடித்தளம் இருக்கிறது. அதில் இதர சில சமூகங்களின் ஆதரவையும் இணைத்துக் கொண்டிருக்கிறார்கள், உதாரணத்திற்கு குஸ்வகா சமுதாயத்தின் ஆதரவு. ஆனாலும், பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் பெரும் பிரிவு, குறிப்பாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர், இன்னமும் நிதிஷ் குமாரின் பின்னால் இருப்பதாக சொல்லப்படுகிறது. நிதிஷ் பல்டி எதுவும் அவர்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறதா? அல்லது அதில் உங்களின் மகா கூட்டணி ஏதும் செல்வாக்கு பெற்றிருக்கிறதா?**

நிதிஷ் பல்டி அடித்ததன் காரணமாகவே பெரிய மாற்றம் ஏற்பட்டு விட்டது எனச் சொல்ல முடியாது. ஆனால், அதற்கு முன்னால், ஒரு சமூக பொருளாதார கணக்கெடுப்பு, சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அது பீகார் மக்களின் நிலைமையை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது. பீகார் வளர்ச்சி அடைந்து

விட்டது என தம்பட்டம் அடிக்கப்பட்டது. ஆனால், மாநில மக்கள் தொகையில் 33-35 சதவீதத்திற்கும் மேல், மாதம் ரூ 6000 க்கும் கீழ் வருமானம் உடையவர்களாக இருக்கிறார்கள். சுமார் 63-65 சதவீதம் மக்கள் ரூ 10000 க்கும் கீழ் வருமானம் உடையவர்களாக இருக்கிறார்கள். ஏழைகளாக இருக்கிறார்கள். நிதிஷ் சுமார் 20 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கிறார். 20 ஆண்டுகளில் என்னதான் வளர்ச்சி என கூறப்பட்டாலும் ஏழை மக்களுக்கு எந்த வளர்ச்சியும் இல்லை. இதுதான் பீகாரின் யதார்த்தம்.

பிற்படுத்தப்பட்டோர் பற்றிப் பேசும்போது அது எப்போதும் நிலையானது போல பேசுகிறார்கள். சாதிய சமன்பாடுகள் நிலையானவை அல்ல. அவை இயங்காற்றல் கொண்டவை. அவை மாறிக்கொண்டே இருக்கின்றன. இன்றைய பீகாரில், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்தியிலும் உணவு, உடை, இருப்பிடம் மிக முக்கியமான பிரச்சனையாக இருக்கிறது. அவர்களுக்கு வீடு ஒரு முக்கிய பிரச்சனையாக இருக்கிறது. நாடு முழுவதுமுள்ள ஏழை மக்களுக்கு, வறியவர்களுக்கு என்னென்ன பிரச்சனைகள் இருக்கின்றனவோ, அவை அனைத்தும் பீகார் மாநில ஏழை மக்களுக்கும் இருக்கின்றன.

இது தவிர, இந்தத் தேர்தலில் இன்னும் இரண்டு முக்கிய பிரச்சனைகள் முன்வந்திருக்கின்றன. ஒன்று இளைஞர் பிரச்சனை. வேலையில்லாத் திண்டாட்டம் நாடு முழுக்க பெரிய பிரச்சனையாக இருக்கிறது. 2020 தேர்தலிலும் கூட வேலையில்லாத் திண்டாட்டம், இளைஞர் மத்தியில் ஒரு கொந்தளிப்புமிக்க பிரச்சனையாக இருந்ததை நாம் கண்டோம். இதை சாதீய கண்ணோட்டத்திலிருந்து பார்க்க முடியாது. இது சாதீய அணிசேர்க்கை என்கிற கண்ணோட்டத்தைப் பொய்யாக்கி ஒரு புதிய சமன்பாடு உருவாவதைக் காட்டுகிறது.

அதே போல, அரசமைப்புச் சட்ட நெருக்கடி என்பது கிராமங்கள் தோறும் பேசுபொருளாக மாறி இருக்கிறது. அரசமைப்புச் சட்டத்தோடு இட ஒதுக்கீடும் சம்பந்தப்பட்டிருந்தாலும் அது வெறும் இட ஒதுக்கீடு குறித்தது மட்டுமே அல்ல. பிஜேபியின் அதிகரித்து வரும் மதவெறிவாதம், மனு ஸ்மிருதியைக் கொண்டு வருவது போன்றவை குறித்ததுமாகும். இதிலிருந்து மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிகள் விலகி நிற்க முடியாது. இது அனைத்து தலித் பகுஜன் மக்களையும் வியாபித்துக் கொண்டிருக்கிறது. இந்த முறை நாடு முழுக்க இந்தப் பிரச்சனைகள் மீதுதான் தேர்தல் நடந்து கொண்டிருக்கிறது. விண்ணை முட்டும் விலைவாசி, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சனைகளோடு கூடவே ஜனநாயகம், அரசமைப்புச் சட்டம் ஆகியனவும் முக்கிய பிரச்சனைகளாக இந்தத் தேர்தலில் முன்னுக்கு வந்திருக்கின்றன.

மீண்டும் மோடி அரசு என பிஜேபி சொல்லி வருகிறது. ஆனால், பல மாநிலங்களிலிருந்தும் வெவ்வேறு செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. நிதிஷ் - பிஜேபியின் மிகப்பெரும் வாக்கு வங்கியாக சொல்லப்படும் பெண்களின் வாக்குகளிலும் மிகப்பெரும் உடைசல் ஏற்பட்டு வருகிறது. இதையும் நாம் சாதிய கண்ணோட்டத்திலிருந்து பார்க்க முடியாது. மாபெரும் மாறுதல்கள் பீகாரில் மட்டுமல்ல, நாடு முழுவதும் நடந்து வருகின்றன.

**மகாராஷ்ட்ராவில் அம்பேத்கர், அரசமைப்புச் சட்டம் போன்றவை குறித்து ஒரு விழிப்புணர்வு தென்படுகிறது. பீகாரில் அது பற்றி சாமான்ய மக்கள் என்ன கருதுகிறார்கள்?**

மகாராஷ்ட்ராவில் அத்தகைய விழிப்புணர்வு மக்களின் உணர்வில், சிந்தனையில் வேர் கொண்டுள்ளது. எனவே அது இயல்பானதுதான். பீகாரில் கடந்த பத்தாண்டுகளில் அம்பேத்கர் சிந்தனைகள் குறித்த விழிப்புணர்வு தொடர்ச்சியாக அதிகரித்து வருவதைக் காண்கிறோம். இன்று ஜனநாயகம், அரசமைப்புச் சட்டம் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறதென்றால், அம்பேத்கர் 70-75 ஆண்டுகளுக்கு முன்பே அது பற்றி புரிந்து கொண்டிருந்தார் என்று அதைப் பற்றி படிப்பவர்கள் சொல்கிறார்கள். அம்பேத்கர் என்றால் அரசமைப்புச் சட்டம், இட ஒதுக்கீட்டின் தலைவர் என்று சொல்பவர்களும் கூட இப்போது வேறுவிதத்தில் யோசிக்கிறார்கள்.

ரோகித் வெமுலாவின் நிறுவனப் படுகொலை நிகழ்வு ஒரு திருப்பு முனையாக அமைந்தது. மோடி அரசுக்கு எதிராக நடந்த முதல் மாபெரும் மக்கள் இயக்கம் மாணவர் இயக்கம்தான். விவசாயிகள் போராட்டத்துக்கு முன்னால், இளைஞர் போராட்டத்துக்கு முன்னால் நடந்த மிகப்பெரும் மாணவர் போராட்டம் அது. இதில் ரோகித் வெமுலா மட்டுமல்ல, அம்பேத்கரும் ஒரு பெரும் காரணியாக இருந்தார். மகாராஷ்ட்ராவோடு ஒப்பிடுகையில், அளவில் சற்று குறைவாகத் தெரிந்தாலும், அத்தகைய விழிப்புணர்வு பீகாரில் அதிகரித்திருக்கிறது. தொடர்ந்து அதிகரித்து வருகிறது. எல்லா திசைகளிலும் அம்பேத்கர் சிலைகள் உதித்திருக்கின்றன. அம்பேத்கர் சிலைகள் உடைப்பு உள்ளிட்ட தாக்குதல்களும் நடந்திருக்கின்றன. அம்பேத்கர் சிலை, அம்பேத்கர் சிந்தனைகள், அம்பேத்கரின் அரசமைப்புச் சட்டம் ஆகியவற்றைக் காக்க வேண்டும் எனும் விழிப்புணர்வும் அதிகரித்திருக்கின்றன.

**தெலுங்கானா காங்கிரஸ் அரசு ரோகித் வெமுலா நிறுவனப் படுகொலை குறித்த 2018 அறிக்கையை பரிசீலிக்காமலே 2024ல் சமர்ப்பித்து இருக்கிறது. இதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?**

அது தவறு. எந்த நிகழ்வு குறித்து மாபெரும் இயக்கம் நடந்ததோ, மாபெரும் விவாதம் நடந்ததோ, அது குறித்து எந்தப் பரிசீலனையும் இல்லாமல் அத்தகையதொரு அறிக்கை சமர்ப்பிப்பது நியாயத்தை, நீதியைப் படுகொலை செய்வது ஆகும். மறுவிசாரணை செய்திட வேண்டும் எனும் கோரிக்கையை நாங்கள் உடனே எழுப்பினோம். அரசாங்கமும் கூட மறுவிசாரணை செய்கிறோம் எனச் சொல்லி இருக்கிறது. காவல் துறை தலைமை அதிகாரியும் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

**உங்கள் கட்சி தேர்தல் பத்திரம் மூலம் நிதி எதுவும் பெறவில்லை என எனக்கு தெரியும். பெரிய செல்வந்தர்களிடமிருந்தும் நீங்கள் நிதி எதுவும் பெறுவதில்லை. அப்படி இருக்கும் போது தேர்தலில் எப்படி போட்டியிடுகிறீர்கள்? உங்கள் மாடல் என்ன?**

மக்களைச் சார்ந்து நிற்பது, மக்களிடமிருந்து உதவி பெறுவது என்பதுதான் எங்கள் மாடல். இந்த முறை அதனை நிறுவனமயப்படுத்த முயற்சி செய்கிறோம். 20 ரூபாய், 30 ரூபாய், 100 ரூபாய் மதிப்புள்ள நன்கொடைச் சீட்டுகள் மூலம் நாங்கள் தேர்தல் பத்திரங்களுக்கு எதிரான போராட்டத்தைத் துவங்கி இருக்கிறோம். கார்ப்பரேட் ஊழலுக்கு சரியான எதிர்ப்பு, மக்கள் செய்யும் உதவிதான். வீட்டுக்கு 20 ரூபாய் கேட்டு வீடுவீடாகச் செல்லும் எங்கள் தோழர்களுக்கு மக்கள் மத்தியில் பீகார் முழுவதும் நல்ல வரவேற்பு கிடைக்கிறது. சிலர் 1000 ரூபாய் கூட கொடுக்கிறார்கள். இது முன்னெப்போதும் இல்லாத பெரும் வரவேற்பு.

எங்கள் தோழர் சந்தீப், நலந்தா தொகுதியில் வேட்பாளராக போட்டியிடுகிறார். அவர் மாணவர் தலைவர். ஆசிரியர் இயக்கத் தலைவர். அவருக்கு மாணவர்களும், இளைஞர்களும், ஆசிரியர்களும், தொழிலாளர்களும், விவசாயிகளும் நிதி உதவி செய்கிறார்கள். 1000 ரூபாய், 2000 ரூபாய் கூட நிதி வழங்குகிறார்கள். இந்த மாடலைத் தான் நாங்கள் உயர்த்திப் பிடிக்கிறோம்.

தேர்தல் செலவுகளைக் குறைப்பதற்காகவும் நாங்கள் போராடி வருகிறோம். தேர்தல் சீர்திருத்தம் தேவை. வேட்பாளர் செலவுக்கு வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கட்சிகளின் செலவுக்கு வரம்பு இல்லை. தேர்தல் பத்திரத்துக்கு எதிராக பேசினால் மட்டும் போதாது. கட்சிகள் செய்யும் செலவுகளுக்கு வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும். எல்லையற்ற செலவு அனுமதிக்கப்படக் கூடாது. தேர்தல் சீர்திருத்தங்கள் தேவை.

இன்னொரு விசயம் பற்றியும் யோசித்தாக வேண்டும். வேட்பாளர்கள் மீதுள்ள வழக்குகள் பற்றி விளம்பரம் செய்ய வேண்டும் என்கிறார்கள். அதை பத்திரிகையில், தொலைக்காட்சியில் விளம்பரம் செய்ய வேண்டும் என்கிறார்கள். 25000 ரூபாய் வேட்பாளர் கட்டணம். ஆனால், விளம்பரத்திற்கு 3-4 லட்சம் செலவாகிறது. தேர்தல் கமிஷன்தான் விளம்பரங்கள் செய்ய வேண்டும்.

கம்யூனிஸ்ட், சோசலிஸ்ட், மக்கள் தலைவர்கள் மீது பொய் வழக்குகள் இருக்கவே செய்கின்றன. எல்லா இடங்களிலும் வேட்பாளர்கள் மீது வழக்குகள் இருக்கின்றன. விளம்பர செலவுகள், தேர்தல் செலவுகள் குறைக்கப்பட வேண்டும். செலவுகள் குறைப்பது உள்ளிட்ட தேர்தல் சீர்திருத்தங்கள் பற்றி விவாதிக்கப்பட வேண்டும்.

## தலையங்கம் தொடர்ச்சி...

செயல்பாடுகளும் கடும் கண்டனத்திற்குரியன. அதற்குரிய தண்டனை சட்டப்படி அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும். அதேவேளை ஒரு ஊடகவியலாளரான சவுக்கு சங்கரை கைது செய்து கோவை மத்திய சிறையில் வைத்து அவரின் கையை உடைத்து, அவர் மீது பொய்யாக கஞ்சா வழக்கு போட்டிருப்பதும் டெல்லிக்குச் சென்று பெலிக்ஸ் ஜெரால்ட்டை கைது செய்திருப்பதும் கண்டிக்கத் தக்க மனித உரிமை மீறல் ஆகும். காவல்துறையினர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற கட்டுப்பாடற்ற போலீஸ் ஆட்சிக்கு இது வழிவகுக்கும். கடந்தகால அதிமுக ஆட்சியில் நடந்ததைப்போலவே திமுக அரசின் கீழ் இருக்கும் காவல்துறையும் செய்யுமானால் சமூக நீதி, பெரியாரின் ஆட்சி என்று சொல்லிக் கொள்வதில் பொருளின்றி போகும். மூன்றாவது, தொடரும் சட்டவிரோத கல்குவாரி மரணங்கள், பட்டாசு ஆலை மரணங்கள். இந்தச் சட்ட விரோதச் செயல்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கே தொடர்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவையெல்லாம் திமுக அரசால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனைகள் ஆகும். அடுத்த இரண்டு ஆண்டுகளும் இப்படியே தொடருமானால், தமிழ்நாட்டிலும் சமூகநீதி காணாமல் போய் சர்வாதிகாரம் முழுமையாகத் தலையெடுக்கலாம். தமிழ்நாடு போலீஸ் ஆட்சியாகாமல் திமுக அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.

# புவி வெப்பமயமாதல் காலநிலை மாற்றம்

-சந்திரமோகன்




**அபாயகரமான புவி வெப்பமயமாதல்**

தமிழ்நாட்டில், தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு வெயில் தகித்தது. சென்னையில் கட்டிட தொழிலாளி ஒருவர் வெயிலின் தாக்கத்தால் உயிர் இழந்தார், கிருஷ்ணகிரியில் கிரிக்கெட் விளையாடிய இளைஞர் வெயிலில் சுருண்டு விழுந்து இறந்தார். வெப்ப அலைகளால் அமைப்பாக்கப்படாத தொழிலாளர்கள், விளிம்புநிலை மக்கள் படும் வேதனைகள் சொல்லி மாளாதது; அவர்களுக்கு ஏற்படும் பொருளாதார இழப்புகளும் ஈடு செய்ய முடியாதது.

ராஜஸ்தான் பாலைவனங்களிலும் ஆந்திராவின் கடப்பா போன்ற மாவட்டங்களிலும்தான், 44 டிகிரி வெயில் இருந்த நிலையில், தமிழ்நாட்டில் கரூர் பரமத்தியில் 44 டிகிரி வெயில் சுட்டெரித்தது. குளிர்ச்சியான ஊட்டியில் வரலாறு காணாத வகையில், 7 டிகிரி அதிகமாக, 29.4 டிகிரி வெயில். இந்தியப் பெருங்கடல் வெப்பத்தில் தத்தளிக்கிறது; இந்தியாவும் ஆசியாவின் பல்வேறு பகுதிகளும் வெப்ப அலைகளால் திணறி வருகின்றன. சமீபத்தில் துபாயில் ஏற்பட்ட பெருமழைக்கு புவி வெப்பமயமாதலே காரணம். அய்ரோப்பாவில் வெப்ப அலைகள், வட அமெரிக்காவில் சூறாவளிகள், ஆசியாவில் நில நடுக்கங்கள் ஆகியவை மானுட சமூகத்தின் இருப்பை அச்சுறுத்தி வருகின்றன.

**காலநிலை மாற்றத்திற்கு யார் குற்றவாளி?**

பெருமுதலாளிகளின் வளர்ச்சிக்காக, பெரிய விலை கொடுக்க முடிவு செய்த ஆட்சியாளர்களின் கொள்கைகள் தான் இத்தகைய நிலைக்கு காரணமாகும்.

மனித சமூகம் பிழைத்திருப்பது சுற்றுச் சூழலை முழுவதுமாக சார்ந்துள்ளது. மனித சமூகம், பிற உயிரினங்கள், தாவரங்கள், நீர், நிலம், காற்று போன்றவை உள்ளடங்கிய இயற்கை அமைப்பே 'சுற்றுச் சூழல்' எனப்படுகிறது. இத்தகைய பல சுற்றுச்சூழல் மண்டலங்களை தன்னகத்தே கொண்டுள்ளதே ''உயிர்க் கோளம்'' (Biosphere) எனப்படுகிறது.

பூமியின் 70 % பெருங்கடல்களால் ஆனது. அதுவே, பூமியின் உயிர்ச்சூழல், காலநிலை ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகின்றன. அதில் நிகழும் மாற்றங்கள், நிலத்திலும் பல மாற்றங்களுக்கு வித்திடுகின்றன. அத்தகைய உள்ளார்ந்த தொடர்புடையதாக அவை இருக்கின்றன.

**காலநிலை மாற்றத்திற்கு காரணம் யார்?**

ஏகாதிபத்திய - முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையே இன்று நாம் எதிர்கொள்ளும் காலநிலை மாற்றத்திற்கு அடிப்படை காரணமாகும். ஆலைகள் வெளியேற்றும் இரசாயன கழிவுகளால் நீர், நிலம், காற்று மாசுபடுதல்; கனிமங்களுக்காக மலைகள் வெட்டப்படுதல், ஆற்று மணல், கடற்கரை தாது மணல் கொள்ளை, அணு உலை கழிவுகள், ரசாயன உரங்கள் போன்றவற்றால் இயற்கை சீரழிக்கப்படுகிறது. இவை அனைத்தும் புவியை அதீத வெப்பமயமாக்குகின்றன, சுற்றுசூழல் நெருக்கடிகளுக்கு காரணமாக அமைகின்றன.

**வெப்பநிலை ஏன் உயர்கிறது?**

தொழிற்சாலைகளுக்குத் தேவையான எரிபொருள்கள் - நிலக்கரி, கச்சா எண்ணெய், எரிவாயு போன்றவை - புதைபடிம எரிபொருள்கள் ( Fossil Fuels) ஆகும். இந்த எரிபொருள்கள் பூமிக்கடியிலிருந்து கண்மூடித்தனமாக எடுக்கப்பட்டு, தொழிற்சாலைகள் மற்றும் மின்னுற்பத்தி நிலையங்களில் எரிக்கப்படுவதால், அதிகளவிலான பசுமைக் கேடு வாயுக்கள் ( கார்பன் டை ஆக்ஸைட், மீத்தேன், நைட்ரஸ் உள்ளிட்ட வாயுக்கள்) வளிமண்டலத்திற்கு வெளியேற்றப்படுகின்றன. ஆண்டுதோறும், சராசரியாக 7 கோடி டன் பசுமைக் கேடு வாயுக்கள் வெளியேற்றப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வளிமண்டலத்தின் மீதான இத்தகைய அபரிமிதமான பசுமைக் கேடு வாயுக்களின் உமிழ்வால், பசுமைக்குடில் அடுக்கானது, அதிக அளவிலான சூரிய வெப்பக்கதிர்களை பூமிக்குள் ஈர்த்து அனுப்பத் தொடங்குகிறது. இதனால் புவியின் சராசரி வெப்பநிலை நாளுக்கு நாள் உயர்வதோடு வளிமண்டலத்தின் தட்ப வெப்பச் சமநிலையை சீர்குலைய வைக்கிறது. அதனால்தான் வெப்பம் மிகக் கடுமையாக அதிகரிக்கிறது.

1993 ஜனவரி முதல் 2020-ம் ஆண்டு மே மாதம் வரை, உலகம் முழுவதும் கடல் மட்டம்

ஓராண்டுக்கு சராசரியாக 3.1 மில்லிமீட்டர் என்ற அளவில் உயர்ந்துள்ளது. இது இன்னும் உயரலாம். உலக வெப்பமயமாக்கத்தால் கிரீன்லாந்து மற்றும் ஆர்க்டிக்கில் உருகும் பனிப்பாளங்கள் கடல் மட்டத்தினை உயர வைக்கின்றன. கடல் மட்டம் தொடர்ந்து உயர்ந்தால், வியட்நாம், பங்களாதேஷ் மற்றும் பிற தீவுகளில் வாழும் 10 கோடி மக்கள் கடும் அழிவுகளை சந்திக்க நேரிடும் என எச்சரிக்கிறார்கள்.

**அன்றே சொன்னார் மார்க்ஸ்**

தனது 'மூலதனம்' நூலில் மார்க்ஸ், '19 ஆம் நூற்றாண்டின் முதலாளித்துவ விவசாய முறையின் கீழ், மண்ணின் வளம் தொடர்ச்சியாக அழிக்கப்படுவதை' சுட்டிக் காட்டுகிறார். மக்கள்தொகை திரட்சியாக உள்ள புது நகரங்களின் தொழிற்சாலை உற்பத்தி மையங்களுக்காக, முதலாளித்துவம், மண்ணின் வளங்களான பொட்டாசியம், நைட்ரஜன் போன்றவற்றைத் திருடி, புவிக்கு தூய்மைக்கேட்டை விளைவிக்கிறது என்றும் முதலாளித்துவ கொள்ளை முறை உலகின் சில பகுதிகளில் உள்ள மண்வளத்தை அரை நூற்றாண்டில் சுரண்டி விட்டது எனவும் மார்க்ஸ் விவரிக்கிறார்.

**மூன்றாம் உலக நாடுகள் மீது தாக்குதல்!**

ஏகாதிபத்திய நாடுகளைச் சார்ந்தே இந்தியா போன்ற வளரும் நாடுகள் இருப்பதால், இயற்கை வளம் சுரண்டப்படுவது மட்டுமல்ல, ஏகாதிபத்தியத்தின் வேதிக் கழிவுகள், அணுக் கழிவுகளின் குப்பை மேடுகளாகவும் திகழ்கின்றன.

ஒருபுறம் முதலாளித்துவ நாடுகளின் ரப்பர், பருத்தி, மரங்கள், கனிமவளங்கள் போன்ற தேவைக்காக மூன்றாம் உலக நாடுகளின் இயற்கை வளங்கள் சுரண்டப்படுகின்றன. மற்றொருபுறம், முதலாளித்துவ நாடுகளின் உயிரி எரிபொருள் தேவைக்காக, வனங்கள் மற்றும் பெரும் நிலப்பரப்புகள் பண்ணை நிலங்களாக மாற்றப்பட்டன. குறிப்பாக, ஆண்டிற்கு 18,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள அமேசான் மழைக்காடுகள் அழிக்கப்படுகின்றன. இவை அனைத்தும் மழைப் பொழிவில் பாதிப்பை ஏற்படுத்தி, புவி வெப்பத்தை அதிகரிக்கின்றன.

**இந்திய வனங்கள், கனிமவளங்கள் சுரண்டல் பாதிப்புகள்**

இந்திய ஆட்சியாளர்கள் பின்பற்றிவரும் உலகமய - தாராளமய - தனியார்மய பொருளாதாரக் கொள்கைகளால், இந்தியாவில் சுரங்கச் செயல்பாடுகள் தீவிரமடைந்துள்ளன.

உலகளவில் இந்தியா, நிலக்கரி மற்றும் இரும்புத் தாது உற்பத்தியில் இரண்டாம் இடத்திலும் அலுமினியம் மற்றும் துத்தநாகம் - தாமிரம் உற்பத்தியில் மூன்றாம் இடத்திலும் உள்ளதாக பிரிட்டிஷ் ஜிஎஸ்ஐ அறிக்கை கூறுகிறது. இந்த உற்பத்தியில் கணிசமான அளவு சீனா, ஹாங்காங் உள்ளிட்ட 193 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. சீன ஒலிம்பிக் போட்டி விளையாட்டு அரங்க கட்டுமானங்களுக்கு கர்நாடகா, கோவா, ஒடிசா மாநிலங்களிலிருந்து மட்டுமே லட்சக்கணக்கான டன் இரும்புத்தாது ஏற்றுமதி செய்யப்பட்டது.

இந்திய சுரங்க அமைச்சரகம் தரும் விவரங்கள் அடிப்படையில் 2021- 22 காலகட்டத்தில் செயல்படும் மிகப்பெரிய சுரங்கங்கள் எண்ணிக்கை 1319 ஆகும். இவற்றில் சிறு கனிமங்கள், எரிபொருள் சுரங்கங்கள், அணுபொருள் சுரங்கங்கள் சேர்க்கப்படவில்லை. அவற்றையும் சேர்த்தால் 3000 ற்கும் மேற்பட்ட பெரிய சுரங்கங்கள் செயல்படுகின்றன. நிலக்கரி (Coal) , இரும்புத்தாது (Iron Ore), பாக்சைட் (Bauxite), தாமிரம் (Copper), சுண்ணாம்புக்கல் ஆகிய சுரங்கங்களில் இருந்து மட்டுமே, இதுவரை கோடிக்கணக்கான டன் கனிமங்கள் இராட்சத எந்திரங்கள் மூலம் பூமியைப் பிளந்து, தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இக்கனிமங்களின் சந்தை மதிப்பு பல லட்சம் கோடி ரூபாய்கள் ஆகும்.

ஆயிரத்திற்கும் கூடுதலான சுரங்கங்கள் தோண்டுவதற்காக, 10 லட்சம் ஹெக்டேருக்கும் (சுமார் 25 இலட்சம் ஏக்கர்) அதிகமான காடுகள் கார்ப்பரேட் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. சுரங்கங்கள் ஏற்படுத்திய கழிவுகள், பாதரச தாக்கங்கள் சுற்றுச்சூழலை மக்கள் வாழ்க்கையைச் சீரழித்தன.

மத்தியப்பிரதேசத்தின் சிங்ரோலி (Singrauli) மாவட்டத்தில் மட்டும், மின்சார உற்பத்தி நிலையம் மற்றும் வேதியல் தொழிற்சாலைகளுக்காக சுமார் 23,000 மக்கள் வாழ்விடங்களிருந்து வெளியேற்றப்பட்டனர். அப்பகுதியிலுள்ள ரேணுகா ஆறு, அனல்மின் நிலையம் வெளியேற்றும் கழிவுகளால், சாம்பலால் அது பாழ்பட்டு விட்டது.

**தீர்வு என்ன?**

கார்ப்பரேட்டுகளின் லாபவெறிக் கொள்ளைக்காக வனங்கள், விவசாய நிலங்கள், கடல் - கடற்கரையோர உயிர்க் கோளங்களைத் தனியாருக்கு தாரை வார்த்து வருகிறது மோடி அரசு. அதற்காக, சுற்றுச்சூழல் சட்டங்களை, விதிமுறைகளை, வனச் சட்டங்களை திருத்தி வருகிறது. ஹைட்ரோகார்பன் உள்ளிட்ட எரிவாயு துரப்பணத் திட்டங்களுக்காக கடலோர நிலம் மற்றும் கடற்பகுதிகளை ஏலம் விடுகிறது. தமிழ்நாடு அரசும் கூட கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவாக, நீர்நிலைகளை, நிலங்களை கையகப்படுத்தும் (சிறப்பு) சட்டங்களைக் கொண்டு வந்துள்ளது. சுற்றுச் சூழல், தட்பவெப்ப நிலை, மக்கள் வாழ்நிலை ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையது. முதலாளித்துவக் கொள்ளை, அராஜகம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பேணும், சுற்றுச் சூழலை காக்கும் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும்.



# பட்டாசு ஆலைகளா? கொலைக் கூடங்களா?

– தேசிகன்

தமிழ்நாட்டில் பட்டாசு ஆலைகளிலும் கல் குவாரிகளிலும் வெடி மருந்து விபத்துகள் அதிகரித்த அளவில் நடந்து வருகின்றன. 25க்கும் மேற்பட்டோர் 5 மாதங்களில் பலியாகி உள்ளனர். இன்னும் பலர் கடுமையான தீக்காயங்களுடன் சிகிச்சையில் உள்ளனர்.

பட்டாசு ஆலைகள், கல் குவாரி நிறுவனங்கள் பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றாதது, பட்டாசுத் தொழிற்சாலைகளை, லைசென்சுகளை குத்தகைக்கு விடுவது, போதிய பயிற்சி இல்லாத தொழிலாளர்களைப் பணிக்கமர்த்துவது என்பது ஒரு புறமிருக்க, இன்னொரு புறம் பட்டாசு ஆலைகளும் கல்குவாரிகளும் எவ்வித முறையான கண்காணிப்புக்கும் உட்படுத்தப்படுவதில்லை.

நாட்டில் நிலவும் கடும் வேலையின்மையினால் உயிரை பணயம் வைத்து வெடி மருந்தைக் கையாளும் வேலைகளில் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அதையே பட்டாசு ஆலை முதலாளிகள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அரசாங்கம் காத்திரமான கண்காணிப்பு பொறியமைவுகளை ஏற்படுத்தாமல் தொடர்ந்து நடக்கும் விபத்துகளை வேடிக்கை பார்த்து வருகிறது. உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் தாங்கொணா துன்பத்தில் இருக்கும் போது, இந்த சுட்டெரிக்கும் கோடையில் தீக்காயம் அடைந்தவர்களும் கடும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

மே 9 அன்று நடந்த விபத்தைத் தொடர்ந்து ஏஐசிசிடியு மாநிலக் குழு உறுப்பினர் தோழர் ராசையா, தோழர் முருகன் குழுவினர் விபத்தில் காயம் அடைந்தவர்களை மருத்துவமனையில் சந்தித்ததோடு விபத்தில் உயிரிழந்தவர்களின் வீடுகளுக்கும் சென்று ஆறுதல் கூறினர்.

- பட்டாசு ஆலை நிர்வாகம் உயிரிழந்தவர்களுக்கு ரூ 50 லட்சமும் காயம் அடைந்தவர்களுக்கு ரூ 20 லட்சமும் இழப்பீடாக உடனடியாக வழங்க வேண்டும்.
- அதுபோல பசுமைத் தீர்ப்பாயம் நியமித்த குழுவின் பரிந்துரைகளான வெடி மருந்துப் பொருட்களை கையாள இயந்திர மயமாக்கல், வேதிப்பொருள்களை கலக்கும் ஊழியர்களுக்கு உரிய பயிற்சி, சான்றிதழ் பெற்ற தொழிலாளர்களை மட்டுமே வேதிப்பொருட்களைக் கலக்கும் வேலைகளில் ஈடுபடுத்துவது, பட்டாசு ஆலை கிடங்குகளை கண்காணிக்கும் அமைப்புகளை வலுப்படுத்துவது, பட்டாசு ஆலை உரிமையாளர்கள் 6 மாதத்திற்கு ஒருமுறை பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றுவது சம்பந்தமான அறிக்கையை சமர்ப்பிப்பது ஆகிய பரிந்துரைகளை திட்டவட்டமாக அமல்படுத்துவதை மத்திய, மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும்.
- அவற்றைக் கடைபிடிக்காத பட்டாசு

ஆலைகள், கல் குவாரிகள் நிரந்தரமாக மூடப்பட வேண்டும்.

- சிவகாசி பகுதி மக்களுக்கு மாற்று வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களை தமிழக அரசு உத்தரவாதம் செய்ய வேண்டும்.
- மாவட்ட, மாநில அளவில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள், பட்டாசு மற்றும் கல்குவாரி தொழிலாளர்கள் மத்தியில் வேலை செய்யும் சங்கங்கள், பட்டாசு ஆலை நிர்வாகங்கள், கல்குவாரி உரிமையாளர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் ஆகியோரை உள்ளடக்கிய கூட்டத்தைக் கூட்டி முறையான விதிமுறைகள் பின்பற்றப்படுவதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும். போதிய ஊழியர்கள் அலுவலர்கள் இல்லாமல் கண்காணிப்புப் பொறியமைவு திறனற்றதாக இருக்கிறது. பட்டாசு ஆலைகளின் கல்குவாரிகளின் எண்ணிக்கைக்கு தகுந்தார் போல் கண்காணிப்பதற்கான ஊழியர்கள் கொண்ட பொறியமைவை தமிழக அரசு ஏற்படுத்த வேண்டும்.
- பட்டாசு ஆலைகள் மற்றும் கல் குவாரிகளில் பணிபுரிவோருக்கு கௌரவமான ஊதியம், பொருளுள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டம், காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றை மத்திய, மாநில அரசுகள் பொறுப்பேற்று உறுதி செய்ய வேண்டும்.
- இதுவரை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களை அணுகி குடும்பத்தினரின் புனர்வாழ்வுக்கான நடவடிக்கைகளை தமிழக அரசு காலம் தாழ்த்தாமல் மேற்கொள்ள வேண்டும்.
- பசுமைத் தீர்ப்பாய குழு பரிந்துரைகளின் அமுலாக்கத்தை உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான குழு கண்காணிக்க வேண்டும்.
- விதிமுறைகளை மீறி, குத்தகைக்கு விடுவதை குற்றச் செயலாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- முறையான உரிமம் பெறாத பட்டாசு ஆலை உரிமையாளர்கள், ஆலைகளை குத்தகைக்கு விடுபவர்கள் ஆகியோருக்கு ஓராண்டு சிறைத் தண்டனை வழங்க சட்டத்தில் வழிவகை செய்யப்பட வேண்டும்.
- விபத்துகள் நடக்கும் போது ஆலையின் ஃபோர்மேன், மேலாளர்களை மட்டும் கைது செய்தால் போதாது. உரிமம் பெற்ற உரிமையாளரையும் கைது செய்ய வேண்டும்.

*பட்டாசு ஆலை வெடிவிபத்து குறித்து தோழர்கள் அந்தோணி முத்து, பேராசிரியர் முரளி (PUCL), மதிவாணன், கண்மணி (PUCL), ஆவுடையப்பன், முருகன், ராசையன், குருவம்மாள் ஆகியோர் கொண்ட ஏஐசிசிடியு-பியுசிஎல் உண்மை அறியும் குழு ஒன்று கள ஆய்வு மேற்கொள்ள 17 மே அன்று சிவகாசி சென்றது. உண்மை அறியும் குழுவின் அறிக்கை பின்னர் வெளியிடப்படும்.*


மாலெ தீப்பொறி சந்தாதாரர் ஆகிடுவீர்!

மாதம் இருமுறை

தனி இதழ் ரூ.10

ஆண்டுச் சந்தா ரூ.200

நன்கொடைகள் தாரீர்

# தீவட்டிப்பட்டியில் பட்டியலின மக்கள் மீது சாதியாதிக்கத் தாக்குதல்

சேலம், தீவட்டிப்பட்டி அருள்மிகு பெரிய மாரியம்மன் கோவில் வழிபாட்டு முறையில் தலித் மக்கள் புறக்கணிக்கப்பட்டதால் சாதியாதிக்க மோதல் ஏற்பட்டது.

இதனை கள ஆய்வு செய்வதற்காக நீதிக்கான மக்கள் இயக்கம் மற்றும் அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம், இகக(மாலெ) குழுவினர் 14.5.2024 அன்று அப்பகுதிக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டனர். நீதிக்கான மக்கள் இயக்கம் சார்பாக அ.சிம்சன், அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் சார்பாக வழக்குரைஞர் க.ஞானதேசிகன், முனைவர் அரச.முருகுபாண்டியன் பி.யு.சி.எல், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் பிலோமினா, அகில இந்திய விவசாயிகள் மகாசபை அய்யன்துரை, இகக(மாலெ) மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, மத்தியக்குழு உறுப்பினர் சந்திரமோகன், மாநிலக்குழு உறுப்பினர் வேல்முருகன், பத்திரிக்கையாளர் தங்கதுரை உள்ளிட்ட குழுவினர் அப்பகுதி மக்களையும் அரசு அதிகாரிகளையும் சந்தித்து கள ஆய்வு மேற்கொண்டனர்.

சேலம் மாவட்டம், கடையாம்பட்டி வட்டம், தீவட்டிப்பட்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு பெரிய மாரியம்மன் கோவில் திருவிழா 2024 ஏப்ரல் 29 முதல் மே வரை நடைபெற இருந்தது. மே 1 ந்தேதி இரவு 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை அலகு குத்தும் நிகழ்வு நடப்பதாக அறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. அதனையொட்டி மே 1 ந் தேதி நாச்சினம்பட்டி காலனி ஆதிதிராவிட சமூக மக்கள் பெண்கள் 4 பேர் அலகு குத்தி மாரியம்மனுக்கு நிவர்த்திக் கடன் செலுத்துவதற்காக சென்றனர். வழக்கமாக பூசை செய்வதற்கு வரும் பூசாரி கோவிலுக்கு வராமல் இரவு 7.00 மணியிலிருந்து 9.00 மணி வரை, ஆதிதிராவிட சமூகத்தின் நான்கு பெண்களையும் காத்திருக்க வைத்திருக்கிறார். அதன்பின் அவர்கள் நால்வரும் தாங்கள் ஏற்பாடு செய்த தனி நபர் மூலமாக அலகு குத்திக் கொண்டனர். பின்னர் அலகை நீக்கிவிட்டு சாமியை வழிபடக் கோவிலுக்குள் சென்றனர். அப்போது அங்கு நின்றிருந்த, கோவில் தர்மகர்த்தா என அறிவிப்புச் செய்து கொண்ட, மருதைய்யா பிள்ளை, ராஜூ, கிருஷ்ணன், தினேஷ்குமார், வெங்கடேஷ் மற்றும் கூடி இருந்த பலரும் அப்பெண்களை கோவிலுக்குள் செல்ல அனுமதிக்க முடியாது எனச் சொல்லி, வெளியில் நிறுத்தி திருநீறு வழங்கியிருக்கிறார்கள். வழக்கத்திற்கு மாறாக, கோவிலுக்குள் அனுமதிக்காத அச்செயலைக் கண்டித்து நாச்சினம்பட்டி காலனி மக்கள் சுமார் நூற்றுக்கும் மேல் கோவிலின் முன்பாக ஒன்று திரண்டு தர்ணா போராட்டம் செய்துள்ளனர். போராட்டம் இரவு 12.00 மணி வரை நீடித்தது. வட்டாட்சியர் மற்றும் காவல்துறை துணை கண்காணிப்பாளர் ஆகியோர் கோவிலில் திரண்டிருந்த மக்களைச் சமாதானப்படுத்தி இது விசயமாக அமைதிப் பேச்சு வார்த்தை மே 2 காலை 10 மணிக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் என அறிவித்ததன் அடிப்படையில் கூட்டம் கலைந்து சென்றது.

மே 2 அன்று காலை 10 மணிக்கு பேச்சு வார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தையில், ஆதிதிராவிட மக்கள் பிரதிநிதிகளாக 10 நபர்கள், தலித் அல்லாத சமூக மக்கள் பிரதிநிதியாக 10 நபர்கள், இந்து அறநிலையத்துறை இன்ஸ்பெக்டர், காவல்துறை துணை கண்காணிப்பாளர், ஆய்வாளர் மற்றும் சில அரசு அதிகாரிகளும் கலந்து கொண்டனர். அருள்மிகு பெரிய மாரியம்மன் கோவில் இந்து அறநிலையக் கட்டுப்பாட்டில் 1973லேயே இணைக்கப்பட்ட செய்தியை அறநிலையத்துறை அதிகாரி அறிவிப்பு செய்துள்ளார். ஆகவே இக்கோவில் பொதுக் கோவில். அனைவரும் கோவிலுக்குள் செல்ல அனுமதி உண்டு எனச் சொன்னவுடன் தலித் அல்லாத சமூகத்தார் இச் செய்தி எங்களுக்குத் தெரியாது என்று கூறி, இங்கு வராத எங்கள் ஊர் மக்களைக் கூட்டிப் பேசி விட்டுத்தான் முடிவு தெரிவிப்போம் எனச் சொல்லி விட்டனர். அதனடிப்படையில், ஒரு நாள் அவகாசம் அளிப்பதாக வட்டாட்சியர் அறிவிப்புச் செய்து, அமைதிப் பேச்சு வார்த்தை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

அதன்பின், அன்று மதியம் 2.30 மணி அளவில் ஆதிதிராவிடமக்களுக்கும் தலித் அல்லாத சமூகத்தாருக்கும் இடையே கலவரம் மூண்டது. கல் வீசப்பட்டது. கடைகள் அடித்து நொறுக்கப்பட்டு தீ வைக்கப்பட்டது. பலர் காயமடைந்தனர். ஆதிதிராவிட மக்களுக்கு பாதிப்புகள் அதிகமாக உள்ளன. இரண்டு சமூக மக்கள் மீதும் வழக்குகள் பதியப்பட்டுள்ளன. ஆதிதிராவிடப் பெண்கள் கோவிலுக்குள் செல்ல மறுப்புத் தெரிவித்த 10க்கும் மேற்பட்ட நபர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டப்பிரிவின் கீழ் வழக்குப் பதியப்பட்டிருக்கிறது. மேற்கொண்ட கள ஆய்வின் அடிப்படையில், உண்மை அறியும் குழு அரசிற்கு முன் வைக்கும் உடனடிக் கோரிக்கைகள்.

நாச்சினம்பட்டி ஆதிதிராவிட மக்கள் தேங்காய்

தொழிற்சாலையிலும் எண்ணெய் மில்களிலும் விவசாய வேலைகளிலும் ஈடுபட்டுவரும் அன்றாடக் கூலித் தொழிலாளர். தங்கள் அடிப்படை வாழ்வாதாரத்திற்காக மேற்படி தலித் அல்லாத சமூக மக்களைச் சார்ந்தே இருக்க வேண்டிய சூழல் உள்ளது. தற்போது தொழில் உரிமையாளர்கள் அனைவரும், கோவில் பிரச்சினைக்குப் பின், நாச்சினம்பட்டி ஆதிதிராவிட மக்களுக்கு வேலை தர மறுத்ததால் கிட்டத்தட்ட 15 நாட்களாக உணவுக்குக் கூட வழியின்றித் தவிக்கின்றனர். அரசு உடனடியாக அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருத்துவ உதவிகளை போர்க்கால அடிப்படையில் ஏற்பாடு செய்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும். தேசிய ஊரக வேலைத்திட்டத்தை உடனடியாக துவக்க வேண்டும்.

- வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.
- காயமுற்றவர்களுக்கு உரிய சிகிச்சை, நிவாரணம் வழங்க வேண்டும்.
- அருள்மிகு பெரிய மாரியம்மன் கோவிலை உடனடியாக இந்து அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருப்பதை அறிவிக்கும் விதமாக, தனிநபர் அறங்காவலர் பெயர் பொறித்துள்ள கல்வெட்டை அகற்றி, அவ்விடத்தில் அரசின் இந்து அறநிலையத்துறை பெயர்ப்பலகை பொருத்தப்பட வேண்டும்.
- அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் பூசாரி மற்றும் கோவில் ஊழியர்களை நியமனம் செய்ய வேண்டும்.
- இந்து அறநிலையத்துறை விதிப்படி கோவில் நிர்வாகக் குழுவில் தலித் பிரதிநிதி ஒருவரையும் நியமித்து அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.
- கலவரத்தைக் கலைப்பதாகச் சொல்லிக் கொண்டு, அத்துமீறி நாச்சான்பட்டி காலனிக்குள் சென்று வீடு புகுந்து சிறியவர், பெரியவர், பெண்கள் எனப் பாராமல் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்திய ஆய்வாளர் உள்ளிட்ட காவல்துறையினர் மீது வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- சமூக - பொருளாதார ரீதியாகப் பின் தங்கியுள்ள நாச்சான்பட்டி ஆதிதிராவிட மக்கள் பக்கம் அரசு நின்று நீதி வழங்கி அமைதியை நிலைநாட்டவேண்டும்.

இக் குழுவின் முழு விசாரணை அறிக்கை பின்னர் வெளியிடப்படும்.




# ரோஹித் வெமுலா நிறுவனப் படுகொலை! மறுவிசாரணை வேண்டும்!!

-சந்திரமோகன்

2014 ல் மோடி ஆட்சிப் பொறுப்பு ஏற்ற உடனேயே தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், சென்னை ஐஐடியில் அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்டத்திற்குத் தடை விதித்தது உட்பட, நாட்டின் பல்வேறு மத்திய பல்கலைக்கழகங்களில் துடிப்பாக செயல்பட்ட இடதுசாரி மற்றும் அம்பேத்கரிய மாணவர் சங்கங்களை நசுக்கத் துவங்கியது.

இதில் ஒரு பகுதியாக, ஹைதராபாத் பல்கலைக்கழகத்தில் அம்பேத்கர் மாணவர் இயக்கத்தை ஒழித்திட தாக்குதல் தொடுக்கப்பட்டது. 2016 - 17ல், ஹைதராபாத் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர் ரோஹித் வெமுலாவுக்கும் ஏபிவிபி மாணவர் சங்க உறுப்பினர் ஒருவருக்கும் நிகழ்ந்த மோதலை காரணம் காட்டி, பல்கலைக் கழகத்திலிருந்து அவரை வெளியேற்ற நிர்வாகம் முடிவு செய்தது. ஆட்சியதிகாரத்தில் இருந்தவர்களுக்கு ரோஹித் வெமுலா தலித் என்பதும் அம்பேத்கரிய மாணவர் சங்க செயற்பாட்டாளர் என்பதும் நன்கு தெரியும். மத்திய அமைச்சர் பண்டாரு தத்தாத்ரேயா நிர்ப்பந்தத்தினால்தான் வெமுலா பல்கலைக்கழகத்தில் இருந்து நீக்கப்பட்டார். நிர்வாகத்தின் சதிக்குப் பலியான ரோஹித் வெமுலா தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். அது ஒரு ரோஹித் வெமுலா நிறுவனப் படுகொலை என கண்டனம் தெரிவித்து நாடு முழுவதும் மாணவர்கள் எழுச்சி உருவானது. எனினும், அவர் உயிரிழப்புக்கு காரணமான ஒன்றிய அமைச்சர், துணைவேந்தர், ஏபிவிபியினர் உள்ளிட்ட குற்றவாளிகள் யாரும் கைது செய்யப்படவில்லை. அதற்கு மாறாக, ஏபிவிபி, 'ரோஹித் தலித் அல்ல' என பொய் சொல்லி, குற்றத்தை மறைத்திட, விவாதத்தை

திசை திருப்பியது. அன்றைய மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அதை வழிமொழிந்தார். மக்கள் பணத்தை விரயம் செய்து, ரோஹித்தின் சாதியைப் பற்றி புலனாய்வு செய்து. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலிடம் 'ரோஹித் தலித் இல்லை' என்று ஒரு அறிக்கையை புலனாய்வுத் துறை அளித்தது.

### வெறுப்பு அரசியல் நடத்திய வேட்டை!

ரோஹித்தின் தாய் ராதிகாவின் தலித் பின்புலத்தை மறைத்து திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றும் திருமணமாகி 5 வருடங்கள் கடந்த பின்னர் ரோஹித்தின் தந்தைக்கு அது தெரியவந்தது என்றும் ஏமாந்து தீண்டத் தகாத பெண்ணொருத்தியை திருமணம் செய்து விட்டதாகக் கொடுமைப்படுத்தி ரோஹித்தின் தாய், ராதிகா விலக்கி வைக்கப்பட்டார். இதனால், ஒதுக்கப்பட்ட, அவமானப்பட்ட அவர், ஒற்றை ஆளாக தையல் தொழில் செய்து, ரோஹித்தையும் இதர பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கினார். ரோஹித் வெமுலாவும் அவரின் சகோதரரும் கட்டுமான வேலைகள், வீட்டு வேலைகள் செய்து சம்பாதித்துக் கொண்டே படித்தனர்.

ரோஹித் தனது முகநூலில் தாயின் தையல் எந்திர படத்தை போட்டு "எனக்கு பெலோஷிப் (உதவித் தொகை) கிடைப்பதற்கு முன்பு, இதுதான் எங்கள் வீட்டிற்குச் சம்பாதித்துப் போட்டது' என எழுதினார். அவர் தலித் என்பதால் பல இன்னல்களைச் சந்தித்தார். காவிப் பாசிஸ்டுகளின் வெறுப்பு அரசியலால் மரணமடைந்தார். மகனை இழந்தது மட்டுமின்றி தன் மகன் தலித் தான் என நிரூபிக்க ஒரு நீண்ட போராட்டத்தை ராதிகா நடத்த வேண்டியிருந்தது.

### உச்சநீதிமன்றம் சொல்வது என்ன?

ரமேஷ்பாய் தபாய் நாய்க்கா -எதிர்- குசராத் அரசு வழக்கில், 2012 ல் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், தாயார் எஸ்சி/ எஸ்டி வகுப்பைச் சேர்ந்தவராக இருக்கும்போது, தந்தையின் சாதியைத்தான் பிள்ளையின் சாதியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற 'நெகிழ்வற்ற பொது விதி' எதுவும் இல்லை என்று சொன்னது. தாயாரின் சாதியை தேர்வு செய்து கொள்ளலாம் என்றதோடு, இத்தகைய திருமணங்களில் தலித் இணையர் சந்திக்கும் பல்வேறு சிக்கல்கள் குறித்தும் விவாதித்தது.

'எஸ்சி அல்லது எஸ்டி வகுப்பைச் சேர்ந்த தாயினால் வளர்க்கப்பட்ட, அதுபோன்ற திருமணங்களால் பிறந்த ஆண்/ பெண், தமது தரப்பு ஆதாரங்களை முன்வைப்பது அவர்களின் உரிமையாகும். முன்னேறிய சாதியைச் சேர்ந்த தந்தை என்பதால் அவர்களுக்கு சாதகமான துவக்கம் நிகழ்வதில்லை. மாறாக, தாய் சார்ந்த சாதிக்கு நேரும் 'ஒதுக்கப்படுதல், அவமரியாதை, அவமானம், ஊனமுற்ற நிலை' அந்தப் பிள்ளைகளுக்கும் நேர்கிறது. மேலும், அந்த சமூகப் பிரிவைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல், அதற்கு வெளியே உள்ளவர்கள் கூட, தாயின் சாதியைச் சேர்ந்தவராகவே பிள்ளையையும் நடத்துகிறார்கள் என்றது உச்ச நீதிமன்றம்.

இதன்மூலம் ரோஹித் வெமுலா, சட்டரீதியாக தலித் தான் என்பது தெளிவாகிறது.

ஆனால், ரோஹித்தை ஒரு தலித்தாகவே நடத்தி விட்டு, அவரின் இறப்புக்குக் காரணமான பாஜக, தான் தப்பிக்க 'ரோஹித் வெமுலா தாயின் சாதியைச் சேர்ந்தவரில்லை, தந்தையின் சாதியைச் சேர்ந்தவர்' என்று சொன்னது.

### மறுவிசாரணை வேண்டும்!

பல்கலைக்கழகங்களில், உயர் கல்வி நிறுவனங்களில், பள்ளிகளில் கடைபிடிக்கப்படும் சாதீய பாகுபாட்டிற்கு முடிவு கட்ட 'ரோஹித் சட்டம்' ஒன்றிய அரசால் இயற்றப்பட வேண்டும், ஆர்எஸ்எஸ் ஆதரவு துணை வேந்தர் நியமனம் மூலம் பல்கலைக் கழகங்கள் பாஜக அரசின் "பொம்மை" நிர்வாகங்களாக மாற்றப்பட கூடாது, சுயாட்சித் தன்மை பறிக்கப்பட கூடாது என்று கோரி கடந்த 8 ஆண்டுகளாக பல போராட்டங்கள் நடந்துள்ளன.எதுவும் மோடி அரசால் கண்டு கொள்ளப்படவில்லை. தற்போது எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, மறுவிசாரணை ஏதுமின்றி, அதே பழைய பிஆர்எஸ் அரசாங்க அறிக்கையை, தற்போதைய தெலுங்கானா காங்கிரஸ் அரசின் காவல்துறை அப்படியே தாக்கல் செய்திருப்பது மிகப்பெரும் அநீதியாகும்.

விசாரணை அறிக்கை, பல்கலைக்கழக நிர்வாகத்தின் தொடர்ச்சியான துன்புறுத்தல் மற்றும் தண்டனை, ஏபிவிபி மற்றும் பாஜக தலைவர்களின் தலையீடுகளை ஒப்புக்கொண்ட போதும், அவர்களை பழியிலிருந்து விடுவிக்கிறது. மேலும் இது ஒரு நிறுவனப் படுகொலையை மறைக்கிறது. ரோஹித் வெமுலாவின் அவரது தாயார் ராதிகாவின் பண்பு நலன்களை அழித்தொழிக்கும் செயல், காவல்துறையிலிருக்கும் சாதிவெறிக்கு இது உதாரணம் ஆகும். காவல்துறை அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தெலங்கானா காங்கிரஸ் அரசாங்கம் இந்த வழக்கில் மறுவிசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

# தமிழகமும் வறட்சியும்

– சிம்சன்



வறட்சிக்கான முக்கிய காரணங்கள் நான்கு. 1 வான்நிலை வறட்சி (Meteorological drought) 2. விவசாயத்தில் வறட்சி (Agricultural drought ) 3. நீரின் வறட்சி (Hydrological drought) 4. சமூக – பொருளாதார வறட்சி (Socio - Economic drought). இவை நான்கும் ஒன்றோடொன்று தொடர்புடைய, இயங்காற்றல் கொண்டவை.

**வான்நிலை வறட்சி (Meteorological drought )**

தமிழகத்தை பொறுத்தவரை சராசரி மழைப் பொழிவு மிகக் குறைவாகவே இருக்கிறது. 2015 ஆம் ஆண்டில் 8 மாவட்டங்கள் வறட்சிக்கானவையாகக் கணக்கிடப்பட்டன. இவ்வாண்டும் அதேபோல கன்னியாகுமரி, மதுரை, இராமநாதபுரம், சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் ஒழுங்கற்ற மற்றும் கணிக்கமுடியாத மழைப் பொழிவு இருந்ததை பார்க்கிறோம். மழை பொய்த்துப் போவதற்கான காரணங்களில் முக்கியமான ஒன்று பூமி வெப்பமயமாதலாகும். ஆண்டுதோறும் மழை பொய்த்துப் போவதை வறட்சிக் குறியீடாக அரசு கணக்கீடு செய்கிறது.

**விவசாயத்தில் வறட்சி (Agricultural drought)**

தமிழக நிலத்தின் தன்மை இடத்திற்கேற்றவாறு மாறுபட்டதாகும். டெல்டா பகுதிகள் களிமண் அதிக அளவில் கலந்த நிலப்பரப்பு. இதற்கு நீரை உறிஞ்சுகிற தன்மை இல்லை. மழைக்காலங்களில் தேங்கும் நீரில் நெல் மட்டுமே பயிரிடக்கூடிய நிலப்பகுதி. கோடை காலத்தில் டெல்டா நிலங்களில் வெடிப்புகள்தான் உருவாகும். இவ்வெடிப்புகளை மாற்ற வேண்டுமானால் அதிக நீர் தேவை. மூன்று போக நெல் விளைவித்த இப்பகுதியில் தற்போது ஒரு போகத்திற்கே நீர் பற்றாக்குறை உள்ளது.

தென் தமிழகம் வறண்ட கரிசல் நிலம். இங்கு பருத்தி, மிளகாய், பருப்பு வகைகள் பயிரிடப்பட ஏதுவான நிலத் தன்மை கொண்டது. இப்பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் அதிக வெள்ளப் பாதிப்பு ஏற்படுகிறது. திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் 140 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட வெள்ள அபாயம் இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிறது. சென்னை, காஞ்சிபுரம் மாவட்டங்களிலும் 2015 மற்றும் 2024 ல் வெள்ளப்பாதிப்பு அதிகமானதாக இருந்தது.

**நீரின் வறட்சி (Hydrological drought )**

நீரின் தேவையும் அதன் பயன்பாடும் மிக முக்கியமான ஒன்று. தமிழகத்தில் தேர்தலுக்கு முன்னரே தண்ணீர்ப் பற்றாக்குறையால் பல மாவட்டங்களில் மக்கள் போராட்டத்தை துவக்கினர். தூத்துக்குடி, சிவகங்கை, புதுக்கோட்டை, அரியலூர், கடலூர் போன்ற மாவட்டங்களில் உள்ள சில கிராமங்களில் மக்கள் குடிநீருக்கே பல மைல்கள் நடந்து சென்று நீர் சேகரிக்க வேண்டிய நிலைமை இருந்தது.

இந்நிலைமையைப் புரிந்து கொள்ள நாம் மூன்று முக்கிய கட்டங்களை கவனித்தாக வேண்டும். முதலாவது உயிரினம் வாழ உயிர்க்கோளம் ( Biosphere) மிகவும் பொருத்தப்பாடுடையதாக இருக்க வேண்டும். அதாவது உயிர்வாழத் தகுதியான நிலப்பகுதி மற்றும் தட்ப வெப்ப நிலை சீரானதாக அமைந்திருக்க வேண்டும். அடுத்ததாக நீர் வளம் (Hydro sphere) தேவையான அளவு மாசற்றதாக இருக்க வேண்டும். வளி மண்டலம் (Atmosphere) சுத்தமானதாக இருக்க வேண்டும். மேற்கூறிய மூன்று நிலைமைகளின் மீது செயலற்று இருப்பதோ அல்லது அவற்றைப் புறந்தள்ளி விடுவதோ மிகவும் ஆபத்தானதாகும்.

நீர் மேலாண்மையைக் கண்காணித்து தேவைக் கேற்றளவில் பகிர்வது என்பது இல்லை. நீர் நிலைகளைப் பாதுகாக்க காடுகளும், கடலும் அடிப்படையிலே மிக முக்கியமான ஒன்று. கடலும் காடுகளும் காலத்தின் தட்ப வெப்ப நிலையை சீராக்கும் முக்கிய சீராக்கிகளாக (Regulator) செயல்படுகின்றன. நீர் நிலைகளின் மேலாண்மை என்பது குளங்கள், கண்மாய், ஏரிகள் ஆகியவற்றை தூர் வாரி பராமரிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 61 பெரிய நீர்த்தேக்கங்களும்

சுமார் 39,200 சிறிய நீர் நிலைக் கண்மாய்களும் இருக்கின்றன. ஆனால், அவை பெரும்பாலும் வறண்டு கிடக்கின்றன. காவிரி, வைகை, பாலாறு, தாமிரபரணி ஆறுகள் வறண்டு காணப்படுகின்றன. மழைக்காலங்களில் மட்டுமே ஆற்று நீர் ஓடி கடலில் கலக்கிறது. ஆறுகள் வறண்டு போனதற்கான காரணம் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள காடுகள் அழிக்கப்பட்டதுதான் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மழை நீர்த் தேக்கத்திற்கான கொள்கை இருப்பதாக சொல்லப்பட்டாலும் அவை நடைமுறையில் அமுலாக்கப்படவில்லை. சென்ற 2015 ல் சென்னையில் ஏற்பட்ட வெள்ளத்தில் சுமார் 380 டி.எம்.சி தண்ணீர் வீணாய் கடலில் கலந்தது. சென்னையில் தற்போது ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 35,000 பேர் வசிக்கின்றனர். மக்கள் அடர்த்தி அதிகரிக்கும் போது நீர்த்தேவையும் அதிகரிக்கிறது, சுற்றுப்புறச் சூழலும் மாசு படிதலும் அதிகரிக்கிறது. நகர்ப்புறமயமாதலின் வேகத்தினால் நகரங்களின் தேவைகள் அதிகரிக்கின்றன.

***சமூக – பொருளாதார வறட்சி (Socio - Economic drought )***

தமிழகம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் முன்னேறிய மாநிலமாக சொல்லப்படுகிறது. நீரின் தேவையும் அதன் இருப்பும் தமிழக வளர்ச்சியின் முக்கிய காரணிகள். தொழில் மற்றும் விவசாய வளர்ச்சியின் நிலைமைகளுக்கேற்ப நீரின் இருப்பு பராமரிக்கப்படுவது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஆற்று ஓரங்களில் தொழிற்சாலைகள் ஆற்று நீரை கணிசமாக பயன்படுத்துகின்றன, மாசுபடுத்துகின்றன. தொழிற்சாலை கழிவுகள் அனைத்தும் ஆற்று நீரில் கலக்கப்படுகிறது. இதனால் கடல் நீரும் அசுத்தமாக்கப்படுகிறது. பாலாறுதான் உலகின் மாசுபடிந்த ஆறுகளில் நான்காவதாக இருக்கிறது என ஆய்வு சொல்கிறது. ஏனெனில் இவ்வாற்றின் அருகில்தான் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளன. இவற்றின் கழிவுகள் நீரை மிக மோசமாக அசுத்தப்படுத்துவதோடு கடல் நீரையும் மாசு படியச் செய்கிறது. ஆற்றங்கரைகளில் மணல் குவாரி அமைக்க தனியாரை அனுமதிக்கிறது அரசு. பெரும் மணல் கொள்ளை நடைபெறுகிறது. சமீபத்தில் உயர்நீதிமன்ற மதுரைக் கிளை மணல் அள்ள தனியாருக்கு உரிமம் வழங்கக் கூடாது என தீர்ப்பு வழங்கியுள்ளது (திருவாடானை வட்டம், சிறுகம்பையூர் ஆற்றுமணல் கொள்ளை வழக்கு).

கட்டுப்படுத்த முடியாத இடம் பெயர்தல், விவசாயத்திற்கான நீர் பற்றாக்குறையால் விவசாயிகள் விவசாயத்தை விட்டு வெளியேறுதல், தற்கொலை செய்துகொள்ளுதல், டெல்டா பகுதிகளில் விவசாயத்தை அழிக்கின்ற எரிவாயுக் குழாய்கள் பதிப்பு மற்றும் மீத்தேன் கிணறுகள் தோண்டுதல், நாகப்பட்டினத்தில் உள்ள கடலோர கிராமங்களில் பலநூறு ஏக்கர் நிலங்கள் கடல் அரிப்பு இவையும் இன்னபிறவும் தமிழக வறட்சியின் அறிகுறிகளாக இருக்கின்றன.

நீர் நிலைகளைப் பராமரித்தல், காற்று மற்றும் கடல் மாசு படுதலை தடுத்தல், காடுகளை வளர்த்தெடுத்தல் ஆகியன குறித்த சூழலியல் அறிவியல் கண்ணோட்டமின்றி கார்ப்பரேட் கொள்ளைக்குத் துணை போகிறார்கள் ஆட்சியாளர்கள். வளர்ச்சிதம்பட்டத்தின் பின்னால் சுற்றுச் சூழல் கேடு, நீராதாரம் உள்ளிட்ட இயற்கை வளங்கள் சூறையாடப்படுவது, லாபவெறி பிடித்த கார்ப்பரேட் கொள்ளை ஆகியன ஆட்சியாளர்களால் மறைக்கப்படுகின்றன. வறட்சி, சூழலியல் கேடு, வெப்பமயமாதல் ஆகியன இயற்கை அல்ல. இவற்றுக்கு முதன்மை காரணம் கார்ப்பரேட் லாப வேட்டை, அரசின் கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகள்தான்.

***அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்***

- பெரு நீர்த்தேக்கங்கள், கண்மாய்கள், குளங்கள் தூர் வாரப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.
- ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நீர்நிலைகளைக் கண்டறிந்து ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும்.
- உயிரினங்களுக்கு ஊறு செய்யும் மரங்களைப் பயிரிடுவது தடுக்கப்பட வேண்டும்.
- விவசாயத்தைப் பாழடிக்கும் மீத்தேன், ஹைட்ரோ கார்பன் திட்டங்களைக் கைவிட வேண்டும் அனைத்து குக்கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வழி வகை செய்ய வேண்டும் மேற்கு தொடர்ச்சி மலையில் மரங்கள் வெட்டப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். மழை நீர் பாதுகாக்க அறிவியல் ரீதியான தொழில்நுட்பத்துடன் கூடிய செயல்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.
- காடுகள், கடல் மற்றும் ஆறுகளில் மக்காத குப்பைகள் (பிளாஸ்டிக்), தொழிற்சாலைக் கழிவுகள், மருத்துவமனைக் கழிவுகள், சாயப்பட்டறை கழிவு நீர் ஆகியன கலப்பதைத் தடுக்க வேண்டும்.
- மணல்குவாரிகளை உடன் அரசு நிறுத்த வேண்டும். தற்போது கையிருப்பாய் இருக்கிற மணல் மற்றும் தாதுப்பொருட்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.
- நகரமயமாதல் மூலம் நகரங்களில் பெருகும் மக்கள் அடர்த்தியைக் கட்டுக்குள் கொண்டு வர வேண்டும்
- விவசாயத்திற்கான நீர் தேவையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- நாகப்பட்டின கடலோரக் கிராமங்கள் மற்றும் விவசாய நிலங்கள் மீதான கடல் அரிப்பைத் தடுத்து நிறுத்திட வேண்டும்.
- நிலம், நீர், காற்று அனைத்தும் ஒன்றோடு ஒன்று ஒருங்கிணைந்த இயக்கமாய் இருப்பதால் சுத்தமான குடிநீர், சுத்தமான காற்று, சுகாதாரமான உணவு, ஆரோக்கியமான சுகாதாரம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
- சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் ஆலை நிறுவனங்கள் தண்டிக்கப்படவேண்டும்.
- தமிழ்நாட்டின் பசுமைப்பரப்பை அதிகரிக்க தமிழ்நாடு அரசு தீவிரமுயற்சி மேற்கொள்ள வேண்டும்.

பிரஜ்வல் ரேவண்ணா

# ஆணாதிக்க, சாதிவெறியின் பிம்பம்

**– மணி**



இந்த நூற்றாண்டின் மாபெரும் பாலியல் வன்முறை கொடூரன் பிரஜ்வல் ரேவண்ணா. முதல் கட்ட தேர்தலுக்கு முன் ஏப்ரல் 22 இல் அந்தக் காணொளிகள் வெளியானது, ஏப்ரல் 26 வாக்குப்பதிவு முடிந்ததும் ஏப்ரல் 27 இல் அவன் வெளிநாடு தப்பி ஓடினான்.

அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் உள்ளிட்ட பெண்கள் கூட்டமைப்பு அளித்த புகாரின் அடிப்படையில் ஒரு சிறப்பு விசாரணைக் குழுவை கர்நாடக அரசு நியமித்து உள்ளது. புகார் அளித்த இரண்டு பெண்களுள் ஒருவரை கடத்திய குற்றத்திற்காக பிரஜ்வல் தந்தை ரேவண்ணா கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கைது செய்யப்பட்டபோது தேவேகவுடாவின் வீட்டில் இருந்தார். தேவகவுடா வீட்டிற்கு வந்து அவரை கைது செய்யும் தைரியம் காவல்துறைக்கு இருக்காது என்று நினைத்தார். ஆனால் காவல்துறை தேவகவுடா வீட்டிற்கு உள்ளே சென்றும் கைது செய்வோம் என தகவல் கொடுத்ததால் ரேவண்ணா வெளியில் வந்து கைதாக வேண்டியதாகி விட்டது.

பிரஜ்வல் பாலியல் கொடூரங்கள் மழையாகப் பொழிந்தது ஏப்ரல் 22 என்றாலும் ஓராண்டாகவே தூறல் விழுந்து கொண்டிருந்தது. பிரஜ்வல் ரேவண்ணாவை வேட்பாளராக அறிவிப்பதற்கு மதச்சார்பற்ற ஜனதா தள கட்சித் தலைவர்களும் பாஜக தலைமையும் எதிர்ப்பு தெரிவித்ததையும் மீறி அவரை நாடாளுமன்ற வேட்பாளராக தேவகவுடா அறிவித்தார்.

பிரஜ்வல் நிகழ்த்திய பாலியல் கொடுமைகள் வெளி வந்தபின் அவரின் சொந்த ஊரான ஹோலே நரசிப்பூர் மக்கள் மத்தியில் ஒரு பக்கம் கொதிப்பும் இன்னொரு பக்கம் பீதியும் நிலவுகிறது. ஹாசன் மாவட்டம் ரேவண்ணா குடும்பத்தின் இரும்புப் பிடிக்குள் இருக்கிறது. ஹோலே நரசிப்பூர் சட்டமன்ற உறுப்பினராக தேவகவுடா 27 ஆண்டுகளாகவும் ரேவண்ணா 24 ஆண்டுகளாகவும் இருந்தார்கள். ஹாசன் மாவட்டத்தில் ரேவண்ணா குடும்பம் வைத்ததுதான் சட்டம். அதை ஒரு தனி குடியரசு போல நடத்தி வந்தனர்.

ரேவண்ணாவை அவர் வீட்டிலோ அலுவலகத்திலோ பார்க்க வருபவர்கள் நின்று கொண்டு தான் பேச வேண்டும். எல்லோரையும் ஒருமையில் அழைப்பதுதான் பிரஜ்வலின் வழக்கம். பார்க்க வருபவர்கள் உட்கார நாற்காலிகள் கூட இல்லாத அலுவலகம் அது. அந்தக் கால அரசவைகள் கூட இந்த அளவிற்கு மோசமாக இருந்திருக்கவில்லை. அந்தக் குடும்பம் ஜாதி வெறியின் பிம்பம். தலித் மக்களுக்கு அந்தக் குடும்பம் இழைத்த கொடுமைகள் எண்ணற்றவை.

கர்நாடக மாநிலத்தில் முதல் கட்ட வாக்குப்பதிவு ஏப்ரல் 26 இல் நடந்தது. ஏப்ரல் 27 இல் பிரஜ்வல் ஜெர்மனிக்கு ஓடி ஒளிந்தான். பிரஜ்வல் விவகாரம் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவை எந்த அளவுக்கு பாதிக்கும் என்ற விவாதங்கள் நடந்தன. மதச்சார்பற்ற ஜனதா தளத்தின் செல்வாக்கு குறைந்த வட மாவட்டங்களில் ஒரு பெருத்த தாக்கம் இருக்காது என்பது பலருடைய கருத்து.

இந்தப் பிரச்சனை மதச்சார்பற்ற ஜனதா தளத்தின் கூட்டணி கட்சியான பாரதிய ஜனதா கட்சியை பாதிக்காதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. பிரஜ்வல் ரேவண்ணாவை கட்சியிலிருந்து தற்காலிகமாக வெளியேற்றுவதன் மூலம் இந்தப் பிரச்சனையின் தாக்கத்தைக் குறைத்து இருப்பதாக பாரதிய ஜனதா கட்சி கருதுகிறது. பாஜகவிற்கு பிரிஜ் பூஷன் அனுபவம் தைரியம் அளிக்கிறது. பலவீனமான மதச்சார்பற்ற ஜனதா தளத்துடன் நின்றால் அந்தக் கட்சியின் சமூக அடித்தளமான ஒக்கலிகா சமுதாயத்தின் ஒரு பகுதியை தன் பக்கம் இழுத்துக் கொள்ளலாம் என்பது பாஜகவின் அரசியல் கணக்கு.

இந்தப் பிரச்சனை வெளிவரும் முன்பே பாஜகவின் பலம் இந்தத் தேர்தலில் குறைந்துள்ளது என பரவலாக நம்பப்படுகிறது. 2019 தேர்தலில் பாஜக 26 இடங்களும் காங்கிரஸ் ஒரு இடமும் மஜத ஒரு இடமும் (அந்த இடத்தின் எம்.பி தான் பிரஜ்வல் ரேவண்ணா) பெற்றிருந்தனர். அது போன்ற வெற்றியை இப்போது பெற முடியும் என்று பாஜகவே நம்பவில்லை. பாஜகவால் பாதிக்கு மேல் இடங்களைப் பெற முடியாது என சொல்லப்படுகிறது.

இந்தத் தேர்தலைத் தாண்டி, புரையோடிப் போயிருக்கும் நிலவுடைமைக் கட்டமைப்பை அசைத்துத் தகர்க்கும் பணி ஜனநாயக மற்றும் இடதுசாரி சக்திகள் முன்னிருக்கும் மிகப்பெரிய சவால்.

# காஸாவின் ரஃபாவை விட்டு இஸ்ரேலே வெளியேறு!
# உலகெங்கும் மாணவர்கள் போராட்டம்

**– சங்கரந்தம்பி**

கொடுங்கோலன் ஹிட்லரால் இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்ட யூதர்கள், இன்று பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்து, இஸ்ரேல் என அதற்குப் பெயரிட்டு, ஹிட்லரைவிடக் கொடூரமாக பாலஸ்தீனர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு 2023 அக்டோபர் 7 அன்று ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேல் மீது தாக்குதல் தொடுத்ததையடுத்து இஸ்ரேல் பாலஸ்தீன மக்களைக் கொன்று குவித்து வருகிறது. வழிபாட்டுத் தலங்கள், பள்ளிக்கூடங்கள் மருத்துவமனைகளே இஸ்ரேலின் இலக்காக உள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதரவாக ஆயுதங்கள் கொடுத்து, ஆயுத வியாபாரம் செய்து கொண்டிருக்கின்றன. இது வரை இல்லாத மிகக் கொடூரமான இனப்படுகொலையை இஸ்ரேல் நடத்திக் கொண்டிருக்கிறது.

இஸ்ரேலின் 128 பேரை ஹமாஸ் அமைப்பினர் பிணைக் கைதிகளாக வைத்துள்ளனர் என்று காஸாவில் முதலில் தாக்குதல் நடத்தி குழந்தைகளையெல்லாம் கொன்றது. கடந்த மே 5ம் தேதி ஹமாஸ் இஸ்ரேலின் மீது தாக்குதல் நடத்தியதாகச் சொல்லி, காஸாவின் அருகில் உள்ள ரஃபாவில் இஸ்ரேல் தன்னுடைய கோர தாண்டவத்தை ஆரம்பித்தது. பிற நாடுகளில் இருந்து காஸாவிற்குள் உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் ரஃபா வழியாகத்தான் சென்று கொண்டிருந்ததையும் தடுக்கும் நோக்குடன் இஸ்ரேல் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கிறது. காஸாவில் இருந்து 10 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பான இடம் என ரஃபாவிற்குள் வந்த நிலையில், அவர்களை அங்கிருந்தும் வெளியேறி கடற்கரைப் பகுதியான அல்-மகாஸிற்குச் சென்று விடுங்கள் என்கிறது இஸ்ரேல்.

21ம் நூற்றாண்டின் மிகப் பெரிய மாணவர் போராட்டங்கள்

இஸ்ரேலுக்கு எதிராகவும் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகவும், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதரவு அளிப்பதைக் கண்டித்தும் உலகெங்கும் மாணவர்கள் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். அம் மாணவர்கள் மீது ஒடுக்குமுறை ஏவப்படுகிறது. அதற்கெதிராகவும் மாணவர்கள் உலகெங்கும் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்கா, கனடாவில் ஆரம்பித்து ஐரோப்பிய நாடுகள், ஆஸ்திரேலியா, ஜப்பான் என போராட்டம் பரவிக் கொண்டிருக்கின்றன. நியூயார்க் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ராபர்ட் கோஹென், 21ம் நூற்றாண்டின் மிகப் பெரிய மாணவர் போராட்டம் இது என்கிறார். அதேபோல், ஏபிசி7 நியூஸ் செய்தியாளர், 21ம் நூற்றாண்டில் அமெரிக்காவின் மிகப் பெரிய மாணவர் போராட்டம் இது என்கிறார்.

அமெரிக்காவில் வெடித்துக் கிளம்பிய மாணவர் போராட்டம்

இஸ்ரேல் பாலஸ்தீன மக்களைக் கொல்வதும் அதற்கு அமெரிக்கா ஆயுதங்கள் கொடுத்து வருவதும் அமெரிக்க மாணவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக் கழக மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்குள் உள்ளிருப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். நிர்வாகம் மாணவர்களை அப்புறப்படுத்த முயற்சித்தது. மாணவர்கள் மீது நடவடிக்கை எடுத்தது. கொலம்பியாவில் படித்துக் கொண்டிருந்த தமிழ்நாடு, கோவை மாணவரும் இதில் உண்டு. ஆனால், அமெரிக்க அரசும் நிர்வாகமும் நினைத்ததற்கு மாறாக, அமெரிக்காவில் 130 பல்கலைக்கழகங்களில் மாணவர் போராட்டம் வெடித்தது. ஹார்வேர்டு, ஸ்டேன்போர்டு, யேல், எம்ஐடி, கலிபோர்னியா பல்கலைக்கழகம், லாஸ் ஏஞ்சல்ஸ் உள்ளிட்ட அமெரிக்காவின் பிரபலமான பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்கும் இப் போராட்டம் பரவியது. அரசும் நிர்வாகமும் அடக்குமுறையை ஏவிவிட்டு, மாணவர்களைக் கைது செய்தது. அமெரிக்காவிலுள்ள 61 கல்லூரிகளிலிருந்து சுமார் 2900 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் மாணவர்களுக்கு ஆதரவாக பேராசிரியர்களும் ஆசிரியர்களும் களமிறங்கினர். எதற்கும் அஞ்சாத மாணவர் போராட்டத்தின் முன்னால் மண்டியிட வேண்டிய நிலை அமெரிக்காவின் அரசிற்கும் நிர்வாகத்திற்கும் ஏற்பட்டுள்ளது.

கனடா, மெக்சிகோ, ஐரோப்பா நாடுகளில் மாணவர் போராட்டம்

கனடா பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக வளாகப் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். கியுபெக்கில் உள்ள மெக்கில் பல்கலைக்கழக



மாணவர்கள் நிர்வாகத்தின் அச்சுறுத்தலையும் காவல்துறையின் அடக்குமுறையையும் மீறி உறுதியோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். அம் மாணவர்கள் போராட்டத்திற்கு தடை விதிக்க அங்குள்ள நீதிமன்றம் மறுத்துவிட்டது. அது மாணவர்களுக்கு கூடுதல் உற்சாகத்தையும் மன உறுதியையும் தந்துள்ளது. கால்கேரி, டொரோண்டோ ஒட்டாவா, பிரிட்டிஷ் கொலம்பியா உள்ளிட்ட பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எட்மாண்டனில் உள்ள அல்பெர்டா பல்கலைக்கழகத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். மெக்சிகோவிலுள்ள மெக்சிகோ தன்னாட்சிப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் உள்ளிருப்புப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். மாணவர்களும் மக்களும் மெக்சிகோ அரசு இஸ்ரேலுடனான உறவை முறித்துக் கொள்ள வலியுறுத்தி வருகிறார்கள்.

லண்டனில் உள்ள நியூகாஸ்டில், பிரிஸ்டல், வார்விக், லீட்ஸ், செப்பீல்டு மற்றும் செப்பீல்டு ஹாலம் உள்ளிட்ட லண்டன் பல்கலைக் கழக மாணவர்கள், இஸ்ரேலுக்கு நிதி உதவி செய்து வரும் நிறுவனங்கள், வங்கிகள் அதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகிறார்கள். லண்டன் கோல்ட்ஸ்மித் பல்கலைக்கழகம் மாணவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதாக உறுதியளித்துள்ளது. இங்கிலாந்திலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களான ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் மாணவர்களும் ஆசிரியர்களும் இங்கிலாந்து இஸ்ரேலுடனான உறவை முறித்துக் கொள்ள வேண்டும் என்கிறார்கள்.

அயர்லாந்திலுள்ள டப்ளின் டிரினிடி கல்லூரியில் மாணவர்கள் கொட்டகை அமைத்து பாலஸ்தீனக் கொடி ஏற்றி, “இஸ்ரேல் ஒரு பயங்கரவாத அரசு”, “இனப் படுகொலையை உடனே நிறுத்து,” “ஆறு முதல் கடல் வரை பாலஸ்தீனத்தை விடுதலை செய்” என்ற பதாகைகளுடன் போராடி வருகிறார்கள்.

பிரான்ஸில் பாரிஸ் இன்ஸ்டியுட் ஆப் பொலிடிக்கல் ஸ்டடிஸ் பல்கலைக்கழகத்தில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக நடந்த பட்டினிப் போராட்டத்தில் அடக்குமுறையை ஏவிவிட்டுள்ளது அந்நாட்டு அரசு. அதேபோல் சர்போர்ன் பல்கலைக்கழகத்திலும் மாணவர்கள் மீது தாக்குதல் நடந்துள்ளது. பிரஞ்சு உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்கூட பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

பெர்லின், ஃபிராங்க்பர்ட், லீப்சிங் உள்ளிட்ட ஜெர்மன் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு எதிராக போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். நெதர்லாந்தில் உள்ள ஆம்ஸ்டர்டாம் பல்கலைக்கழகத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட 125 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். உச்ரெட், டெல்ப் பல்கலைக்கழகங்களிலும் போராட்டங்கள் நடக்கின்றன.

இத்தாலியில் உள்ள பொல்னொ பல்கலைக்கழகம், சபியன்ஸா மற்றும் ரோமில் உள்ள கல்லூரிகளில் மாணவர்கள் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். ஸ்பெயினில் உள்ள வெலன்சியா, போர்சிலோனா, மலாகா, மட்ரிட் உள்ளிட்ட பல பல்கலைக்கழகங்களிலும் சுவிட்சர்லாந்த், ஆஸ்திரியா, பெல்ஜியம், பின்லாந்த் உள்ளிட்ட பல நாடுகளிலும் மாணவர்கள் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

ஆசியா-பசிபிக் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலும் மாணவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். பக்கத்து நாடான பங்களாதேஷத்திலும் தென்கொரியாவிலும் ஜப்பானிலும் இஸ்ரேலைக் கண்டித்து மாணவர் போராட்டங்கள் நடக்கின்றன..

இந்தியாவில் உள்ள மாணவர் அமைப்புகள் எல்லாம் இணைந்து இஸ்ரேலுக்கு எதிரான மாணவர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அகில இந்திய மாணவர் கழகம், ஜேஎன்யு மாணவர் சங்கம் உட்பட பல இந்திய மாணவர் அமைப்புகள் தமது ஒருமைப்பாட்டைத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க அதிபர் கூட ரஃபா மீதான தாக்குதலை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். ஆனால், இஸ்ரேல் அரசு, எவரின் உதவியும் இல்லாமல் நாங்கள் தனியாகவே போரை நடத்துவோம் என்று கொக்கரிக்கிறது.

இந்திய ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்று ஐநாவின் அமைதிப் படையில் பணிபுரிந்து வந்த கர்னல் வைபவ் கேல் காஸாவில் இஸ்ரேல் ராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளார். காஸாவில் அய்நா அமைதிப்படையின் நகர்வு பற்றி இஸ்ரேல் ராணுவத்திற்கு முன்னரே தெரிவித்து இருந்தும் கூட இஸ்ரேல் ராணுவம் திட்டமிட்டு இவர்கள் மீது குண்டு போட்டுள்ளது.

மிகக் கொடூரமாக இந்திய ராணுவ அதிகாரியைக் கொன்றுள்ள நிலையிலும்கூட இந்திய அரசு, இஸ்ரேலைக் கண்டிப்பதற்குத் தயாராக இல்லை. மாறாக, இஸ்ரேலிருந்து பாலஸ்தீன தொழிலாளரை வெளியேற்றியுள்ள இனவெறி அரசுக்கு உதவியாக, இந்தியத் தொழிலாளரை ஏற்றுமதி செய்து வரும் மோடி அரசு, மீண்டும் ஆட்சி அரியணையில் ஏறுவதற்காக, இந்திய மக்கள் மத்தியில் பிரிவினை ஏற்படுத்துவதிலேயே மும்முரமாக இருக்கிறது. தேர்தல் ஆணையமும் கூட இதுபோன்ற இனப் படுகொலைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்க தேர்தல் விதிகளைக் காட்டி ஜனநாயகத்தை மறுக்கின்றது.

இத்தகைய மோடி அரசுக்கு தக்க பாடத்தை இந்திய மக்கள் தேர்தல் களத்தில் புகட்டிக் கொண்டிருக்கிறார்கள். இஸ்ரேலுக்கு ஆதரவாக இருக்கும் ஏகாதிபத்திய நாடுகளைக் கண்டித்தும் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும் உலகம் முழுவதும் போராடிவரும் மாணவர்களோடு இந்திய மக்கள், இடது, முற்போக்கு , ஜனநாயக சக்திகள் தங்கள் ஒருமைப்பாட்டுக் குரலை உரத்து எழுப்புகிறார்கள். அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இஸ்ரேலுக்கு ஆயுதம் அனுப்புவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

# சர்வாதிகாரி வீழ்கிறார்; அவரைத் தூக்கியெறிவோம்!



நடைபெற்றுக் கொண்டிருக்கிற மக்களவைத் தேர்தல்களின் முதல்கட்டத்தில் மேலெழுந்து வந்த போக்குகளை அடுத்தடுத்த கட்டங்கள் உறுதிப்படுத்துகின்றன. இது,பாஜக வாக்காளர்களிடையே அயர்ச்சியையும் மனச்சோர்வையும், சங்கி-பாஜக தலைவர்களிடையே பதற்றத்தையும் விரக்தியையும் உருவாக்கியுள்ளது. தென் மாநிலங்களில் தேசிய ஜனநாயக கூட்டணியை மொத்தமாக துடைத்தெறிவது; வட மாநிலங்களில் அதனைப் பாதியாகக் குறைப்பது என்ற சூத்திரத்திற்கு ஏற்றத்தை வழங்கும் என எதிர்பார்க்கப்படும் 2024 முடிவுகள் குறித்த உரத்த அறிகுறிகளை தமிழ்நாடு, கேரளா, ராஜஸ்தான், உத்தரகண்ட் போன்ற மாநிலங்கள் வழங்கியுள்ளன. வாக்களித்தவர்களின் எண்ணிக்கை, தேர்தல் கணிப்புகள் ஆகியவற்றைத் தாண்டி, கவனத்தைக் கோருகிற விசயம் என்னவென்றால் இந்த நீண்ட தேர்தல் போராட்டத்தில் எழுகிற விவாதங்களேயாகும்.

400 க்கும் அதிகமான தொகுதிகளில் வெல்வது என்ற நம்பிக்கையுடன் தனது தேர்தல் பரப்புரையை பாஜக தொடங்கியது. குடும்ப அரசியல், ஊழல் என்ற பெயரில் எதிர்க்கட்சிகள் மீது கடுமையான தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டது. ஆனால் தேர்தல்கள் தொடங்கி ஒரு வாரத்திலேயே இந்த கூச்சல்களை கேட்க முடியவில்லை. இவை மக்களிடம் எவ்வித அதிர்வுகளையும் ஏற்படுத்தவில்லை என்பதை சங்கிப் படையின் திட்ட வகுப்பாளர்கள் உணர்ந்து கொண்டனர். பாஜகவினுடைய எதிர்பார்க்கப்படும் சரிவின் அளவு பற்றியும், பாஜக குடையின் கீழ் பல்வேறு இடங்களிலும், ஊழலில் திளைக்கும் வாரிசு அரசியல்வாதிகள் அதிகரித்த அளவில் இணைவது குறித்த விவாதமாக பொதுவெளி உரையாடல் நகர்ந்து விட்டது. எனவே விரக்தியின் எல்லைக்கே சென்றுவிட்ட மோடி அவரது நம்பிக்கைக்குரிய, நன்கு சோதிக்கப்பட்ட, முஸ்லிம்களுக்கு எதிராக இந்துக்களை அணிதிரட்டுவது என்னும் கருவான செயல்திட்டத்தை நோக்கித் திரும்பி விட்டார்.

திருமணமான பெண்களின் தாலி, வீடுகள், எருமை மாடுகள் போன்ற சாதாரண மக்களின் சொத்துகளை பறித்து காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு பகிர்ந்தளிக்கும் என்ற எதிர்க்கட்சிகளுக்கு எதிரான அபத்தமான குற்றச்சாட்டுடன் இது தொடங்கியது. அதனைத் தொடர்ந்து எஸ்சி/எஸ்டி/ஓபிசி இட ஒதுக்கீடு முஸ்லிம்களுக்கு திருப்பி விடப்படும் என்ற விஷமத்தனமான பொய் வந்தது. ஒட்டுமொத்த நாடும் ஷரியத் அல்லது முஸ்லிம் தனிநபர் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும், நாடு முழுவதும் கண்மூடித்தனமான பசுவதைக்கு ஊக்கம் அளிக்கப்படும் என மேலும் இரண்டு புதிய அபத்தமான குற்றச்சாட்டுகள் யோகியிடமிருந்து வந்தன. இந்தியாவில் காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கம் திரும்ப அதிகாரத்திற்கு வந்துவிட்டால் பாகிஸ்தான் வெகுவாக மகிழும் என்றும் தற்போது சொல்லப்படுகிறது. உழைக்கும் இந்தியர்களின் வாழ்வாதாரத்தை பேரழிவுக்குள்ளாக்கிய ஒரு கட்சி, லட்சக்கணக்கான நடுத்தர வர்க்கத்தினரின் வருமானம், சேமிப்புகள், சமூக பாதுகாப்பு ஆகியவை அரித்துப்போவதற்கு காரணமான ஒரு கட்சி ஏழைகளின் பெயரில் முதலைக் கண்ணீர் வடிக்கிறது.

பாகிஸ்தானை எதிரியாக சித்தரிப்பது

பாஜகவின் வழக்கமான உத்தியாகும். 2002இல் இருந்து குஜராத்தில் ஒவ்வொரு சட்டமன்ற தேர்தல்களிலும் பாகிஸ்தான் குறித்த பீதியை தனக்கு சாதகமாக்குவதை மோடி வழக்கமாகக் கொண்டிருந்தார். 2015 இல் பீகாரில் நிதிஷ்குமாரின் ஜேடியூ உதவியின்றி சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டியிருந்தபோது, பாகிஸ்தான் பூச்சாண்டியைக் காட்டி பீகார் மக்களிடம் பீதியை கிளப்புவதற்கு அமித்ஷா முயற்சித்தார். அந்த தேர்தல்களில் 243 இடங்கள் கொண்ட அவையில் அதன் எண்ணிக்கை வெறும் 53 ஆக குறைந்து விட்டது. ஆனால் முஸ்லிம்களிடம் சொத்துக்களையும் இட ஒதுக்கீட்டையும் இழந்து விடுவீர்கள் என சாதாரண இந்துக்களை பயமுறுத்துவதில் மோடியும் பாஜகவும் முன்னெப்போதும் இந்தளவு வெளிப்படையாக பேசியதில்லை. ஊடுருவி வந்து மக்கள்தொகையை பெருமளவிற்கு அதிகமாக்கி இந்தியாவைக் கைப்பற்ற முனையும் சமூகத்தினராக, தீயவர்களாக முஸ்லிம்களை சித்தரித்து, அவர்களைத் தாக்குதலுக்கு இலக்காக்கும் அவரின் அடுத்தடுத்த மேடைப் பேச்சுகள் பிரதம மந்திரியிடமிருந்து நேரடியாக வருவது முற்றிலும் அதிர்ச்சிதரத்தக்கதாகவும் அருவருக்கத்தக்கதாகவும் உள்ளது.

பாஜகவின் இந்த முரட்டுத் துணிச்சல் மக்களை சீற்றம் கொள்ளச் செய்ய வேண்டும்.

ஓபிசி இட ஒதுக்கீடு முஸ்லிம்களுக்காக ஒதுக்கப்பட்டுவிடும் என்பதை விட மிக அதிக பொய் வேறெதுவும் இருக்கவே முடியாது. பெரும்பாலான மாநிலங்களில் முஸ்லிம் ஓபிசி/ஈபிசியினருக்கு இடமளிக்க ஒட்டுமொத்த இட ஒதுக்கீடும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் குஜராத் உள்ளிட்ட பத்துக்கும் அதிகமான மாநிலங்களின் ஓபிசி பட்டியலில் பல்வேறு முஸ்லிம் சாதிகள் நீண்ட காலத்திற்கு முன்பே இணைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் முஸ்லிம்கள் என்பதால் இட ஒதுக்கீட்டைப் பெறவில்லை. மாறாக அவர்களது தொழில், சாதி, சமூகத்தில், கல்வியில் பின்தங்கிய நிலை ஆகியவற்றின் காரணமாகவே அவர்கள் ஓபிசி-யினராக அங்கீகரிக்கப்படுகின்றனர். அனேகமாக அத்தகைய சாதிகளின் மிக நீண்ட பட்டியலை குஜராத் கொண்டுள்ளது. மேலும் 2022 இல் ஏஎன்ஐ செய்தி நிறுவனத்திற்கு மோடி அளித்த நேர்காணலில் குஜராத்தில் 70 முஸ்லிம் குழுவினருக்கு ஓபிசி-யின் பலன்கள் அளித்ததற்காக அவர் மார்தட்டி கொண்டதைக் காண முடியும். பீகாரில் கற்பூரி தாக்கூரின் காலத்திலேயே முஸ்லிம் சாதியினர் ஓபிசி பட்டியலில் இணைக்கப்பட்டு விட்டனர். இது ஓபிசி இட ஒதுக்கீடு குறித்த மண்டல் கமிஷனின் பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கு 1990 இல் விபி சிங் அரசாங்கம் செய்த அறிவிப்பிற்கும் முன்பாகும். ஓபிசி பட்டியலில் பல்வேறு முஸ்லிம் சாதியினரை விபி சிங் அரசாங்கமும் கூட இணைத்தது. 1992 இன் முக்கியமான தீர்ப்பில் உச்ச நீதிமன்றத்தின் ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வு ஓபிசி இட ஒதுக்கீட்டின் செல்லுபடியை உறுதி செய்தது.

பின்தங்கிய, வறிய, ‘பசமந்தா’ முஸ்லிம்களுக்கான இயக்கத்தையும், ‘சூஃபி சம்வத்’ (சூஃபி உரையாடல்) என்ற முஸ்லிம் சமூகத்தினரிடம் சென்றடைவதற்கான செயல்திட்டத்தையும் கூட பாஜக நடத்தியுள்ளது. அதன்மூலம் தானும் அனைவருக்குமான கட்சி தான் என்பதை காட்டிக் கொள்ள கடுமையாக முயற்சித்தது. ஊழல், தேசப்பாதுகாப்பு ஆகிய பிரச்சினைகள் ஆதிக்கம் செலுத்திய 2014, 2019 களில் அது பெற்ற வாக்குகள் பெருமளவுக்கு அதனுடைய கருவான அடித்தளத்தையும் தாண்டியவை என்பதையும் அக் கட்சி உணர்ந்துள்ளது. இப்போது அதனுடைய மையக்கருவான அடித்தளத்தை தூண்டிவிட பாஜக தீவிரமாக செயல்படுகிறது. எனவே அது வெட்கமேயின்றி முஸ்லிம் எதிர்ப்பு வெறுப்பினை சார்ந்திருப்பதற்காக, அனைவரையும் உள்ளடக்குதல், வளர்ச்சி, நல்லாட்சி ஆகிய அதன் அனைத்து முகமூடிகளையும் கழற்றிவிட்டது. குஜராத்தில் நன்கு பயன்பட்ட, வெறுப்பையும் பிளவையும் உருவாக்கும் இந்த சூத்திரத்தை இந்தியா நிராகரித்து, அரசமைப்புச் சட்ட அடிப்படையையும் கலாச்சார பன்மைத்துவ உணர்வு, சம குடியுரிமையையும் நோக்கி திரும்புவதற்கான அறிகுறியை 2024 தேர்தல்கள் நமக்கு வழங்குகின்றன.

மோடியின் காலத்தில் இட ஒதுக்கீட்டை பலவீனப்படுத்துகிற செயல்பாடுகளே, இன்றைக்கு இட ஒதுக்கீடு தொடர்பாக உண்மையிலேயே கவலைப்பட வேண்டிய விசயமாகும். பொருளாதார நிறுவனங்களும் சமூகத்துறைகளும் கண்மூடித்தனமாக தனியார்மயமாக்கப்படுவது, வேலைகளை ஒப்பந்தமயமாக்குவது ஆகியவை இட ஒதுக்கீட்டின் வாய்ப்புகளை பெருமளவிற்கு சுருக்கியுள்ளன; அதனை கிட்டத்தட்ட தேவையற்றதாகவும் ஆக்கியுள்ளன. மேலும் இட ஒதுக்கீட்டைத் தவிர்க்கவும், ஒழித்துக் கட்டவும் நிர்வாகத்துறையின் உயர்பதவிகளில் குறுக்குவழி நுழைவுமுறை விரிவுபடுத்தபட்டுள்ளது. பீகாரில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள சாதிவாரி கணக்கெடுப்பும், விரிவுபடுத்தப்பட்ட இட ஒதுக்கீடுமே சமூகநீதியின் கோணத்திலிருந்து இன்றைக்கு எழுந்து வருகிற உண்மையான தேவையாகும். பீகாரின் இட ஒதுக்கீட்டினை 65% ஆக (10% ஈடபிள்யுஎஸ் இட ஒதுக்கீட்டைத் தாண்டி) விரிவுபடுத்தியது இந்தியாவிற்கான முன்மாதிரியை வழங்குகிறது. பீகாரில் சாதிவாரி கணக்கெடுப்பை எதிர்க்க இயலாத பாஜக அகில இந்திய மட்டத்தில் அதனை எதிர்க்கிறது. எனவே அது முஸ்லிம்களுக்கு எதிராக எஸ்சி/ எஸ்டி/ஓபிசியினரை நிறுத்துவதன் மூலம் இட ஒதுக்கீட்டு விவாதத்தை மதவெறிமயமாக்க

தீவிரமாக முயற்சிக்கிறது. அடிப்படையில் இட ஒதுக்கீட்டிற்கு எதிரான தனது சொந்த பார்ப்பனிய அணுகுமுறை பற்றிய (நமது) கவனத்தை திசை திருப்பவும் முயற்சிக்கிறது.


இந்தியாவில் சமூகநீதி கருத்துக்கும் இட ஒதுக்கீட்டிற்கும் ஆர்எஸ்எஸ் இன் வரலாற்று ரீதியான எதிர்ப்பு ஒன்றும் ரகசியமானதல்ல. ஓபிசி இட ஒதுக்கீடு சம்பந்தமான மண்டல் கமிஷனின் பரிந்துரையை அமுல்படுத்தும் அறிவிப்பை எதிர்த்து, 1990 இல் விபி சிங் அரசாங்கத்திற்கான தனது ஆதரவை பாஜக விலக்கிக்கொண்டது. மோடியின் 2014 வெற்றியைத் தொடர்ந்து ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத் இந்தியாவில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என முன்வைத்தார். இன்றைக்கு அவரே, 2000 ஆண்டுகள் சாதிய ஒடுக்குமுறை காரணமாக இன்னுமொரு 200 ஆண்டுகளுக்கு இட ஒதுக்கீட்டை 'பொறுத்துக் கொள்ளத்தான்' வேண்டும் என பேசத் தொடங்கி இருக்கிறார்!

இன்றைக்கு இந்தியாவில் உள்ள பொது மக்களுடைய கவலை இனிமேலும் இட ஒதுக்கீடு பிரச்சனையோடு மட்டும் குறுகியிருக்க முடியாது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் எதிர்காலம் குறித்து கவலை கொள்வதற்கான காரணங்கள் மக்களுக்கு உள்ளது. அம்பேத்கரின் அரசமைப்புச் சட்டத்துடன் கோல்வால்கரின் ஆர்எஸ்எஸ்-சுக்குள்ள வரலாற்று ரீதியான பகைமையுணர்வை புறக்கணித்தால் அது உண்மையில் நவீன இந்தியாவுக்கு பேரழிவாகவே அமையும். இந்திய அரசமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேரத்தில் ஆர்எஸ்எஸ் அதனை வெளிப்படையாகக் கண்டித்தது. மேலும் இந்தியாவிற்கான லட்சிய அரசமைப்புச் சட்டமாக மனுஸ்மிருதிக்கு வெளிப்படையான ஆதரவை தெரிவித்தது. பாஜகவிற்கு தனியாக பெரும்பான்மை இல்லாத போதும் கூட, வாஜ்பாயி, அத்வானியால் தலைமை தாங்கப்பட்ட தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கம் அரசமைப்புச் சட்டத்தின் செயல்பாடுகளை மறு பரிசீலனை செய்வதற்கு ஒரு ஆணையத்தை நியமிக்கத் தயங்கவில்லை. கடந்த பத்தாண்டுகளில் இந்த மோடி அரசாங்கம் ஏற்கனவே அரசமைப்புச் சட்டத்தின் மீது ஆயிரம் வெட்டுக்களை ஏற்படுத்திவிட்டது. அதனுடைய ஆன்மாவையும் கோட்பாடுகளையும் பலவீனப்படுத்தி, ஒவ்வொரு வாய்ப்பிலும் அதனுடைய அடிப்படைக் கட்டுமானத்தையே சேதப்படுத்துகிறது.

மோடி ஆட்சி, அதன் கொள்கைகளை முழு ஆற்றலோடு செயல்படுத்துவதற்கு ஒரு புதிய அரசமைப்பு சட்டம் வேண்டும் என இந்திய விடுதலையின் 75 வது ஆண்டு விழாவின் போது, மோடியின் முதன்மை பொருளாதார ஆலோசகர் விவேக் தேப்ராய் எழுதினார். அம்பேத்கரின் அரசமைப்புச் சட்டம் ஒரு காலனிய ஆவணம் எனவும் 'காலனியமயமகற்றுதல்' என்னும் பெயரில் ஒரு புதிய அரசமைப்புச் சட்டத்திற்கு ஆதரவாகவும் பேசுகிற துணிச்சல் சில சங்கி கருத்தியலாளர்களுக்கு இருக்கிறது. எனவே அரசமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்ட சமயத்தில் பாபாசாகேப் அம்பேத்கர் வெளியிட்ட எச்சரிக்கைகளை இந்தியா நினைவில் கொள்ள வேண்டிய நேரம் இதுவாகும். அம்பேத்கரின் அரசமைப்புச் சட்டத்தினுடைய கருவான அம்சங்களான நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறை, தடுப்புகளும் சமநிலைகளும் கொண்ட அதனுடைய நிறுவனக் கட்டமைப்பு, அதிகாரப் பகிர்வு, கூட்டமைப்புச் சட்டகம் ஆகியவை பெரும் ஆபத்துகளை எதிர்கொள்கின்றன. சண்டிகர், கஜுராஹோ முதல் சூரத், இந்தூர், அருணாசலப் பிரதேசம் வரையில் வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்வதிலிருந்து வாக்கு எண்ணிக்கை வரையிலும், தேர்தல்களின் பல்வேறு நிலைகளில் புதிய மாதிரிகள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதன்மூலம் தேர்தல் நடைமுறையின் நம்பகத்தன்மை சவாலுக்கு உள்ளாக்கப்படுகிறது.

2024 இல் அதன் மிகப்பெரிய தேர்தல் 'துருப்புச் சீட்டாக' ராமர் கோவிலை பாஜக நம்பியிருந்தது. ஜனவரி 22 இல், அயோத்தியில் ஒரு முழுமை பெறாத கோவிலைத் திறந்து, தேர்தல்களின் முக்கியத்துவத்தை குறைக்கிற, கண்ணைக் கவரும் காட்சியாக அதனை மாற்றியது. 'ராமரை கொண்டு வந்தவர்களை நாங்கள் கொண்டு வருவோம்' என்ற பாடல் 2024 இன் தேர்தல் கீதமாக மாறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கோவிலை அரசியலாக்கும் பாஜகவின் முயற்சியும், அதனை பயன்படுத்தி தேர்தலில் வெற்றி பெறலாம் என்ற எதிர்பார்ப்பும் இந்த தேர்தல்களில் வீணாய் போனது போலவே தெரிகிறது. மூன்றாம் கட்டத் தேர்தல்களையொட்டி மோடியின் அயோத்தி சுற்றுப்பயண நிகழ்ச்சி, சமாஜ்வாடி கட்சியும் காங்கிரசும் ஆட்சிக்கு வந்து விட்டால் கோவிலை மருத்துவமனையாக மாற்றி விடுவார்கள் என்கிற மறைமுகமான குறிப்பு, அரசமைப்புச் சட்டம், இட ஒதுக்கீடு முறை ஆகியவற்றின் நிலைத்தன்மை குறித்து மோடி, ஷா, பகவத் ஆகியோர் இந்தியாவிற்கு அளிக்கும் உத்தரவாதம் ஆகியன, இந்த ஆளுகை நிச்சயமாக நிகழப் போகிற தோல்வியிலிருந்து தப்பிக்க முயற்சிக்கிறது என்பதை புரிந்துகொள்வது கடினமானதல்ல. 543 தொகுதிகளில் பாதிக்கும் அதிகமானவற்றில் வாக்குப் பதிவுகள் முடிந்து விட்டன. ஆரம்பகட்ட வாக்குப்பதிவுகள் இந்தியா கூட்டணி தீர்மானகரமாக முன்னணியில் இருப்பதைக் காட்டுகின்றன. எதிர்வரும் அடுத்த கட்டத் தேர்தல்களில் இது அறுதிப் பெரும்பான்மையாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். சர்வாதிகார மோடி ஆளுகையின் பேரழிவுமிக்க ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

# அறிவியல் அறிஞர் ஆர்.எஸ். லால் மோகன் அவர்களுக்கு இகக(மாலெ) இரங்கல்



அறிவியல் அறிஞர் ஆர்.எஸ்.லால் மோகன் அவர்கள் கடந்த மே 13ம் தேதி கோயமுத்தூரில் காலமானார். அவருக்கு வயது 87. லால் மோகன் அவர்கள் நாகர்கோவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் ஒரு ஜனநாயக, முற்போக்குச் சிந்தனையாளர். செயற்பாட்டாளர். சூழலியல் சார்ந்த இயக்கங்களில், போராட்டங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். சுற்றுச் சூழல் பாதுகாவலராக, தொல்லியல் பாதுகாவலராக, இயற்கைப் பாதுகாவலராக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்.

இகக(மாலெ) நடத்திய கருத்தரங்கங்களில் அறிஞர் லால் மோகன் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய கருத்துகளை முன்வைத்துள்ளார். திருநெல்வேலியில் நடைபெற்ற அகில இந்திய மக்கள் மேடையின் முதல் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

அவர் டெல்லியில் உள்ள இந்திய விவசாய ஆராய்ச்சி கழகத்தின் முதல்வராகவும் ஐ.நாவின் சர்வதேச இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் உறுப்பினராகவும் செயலாற்றினார். லால்மோகன் அவர்கள் 150க்கும் மேற்பட்ட புத்தகங்களையும் இந்திய மற்றும் சர்வதேச பத்திரிகைகளில் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

அறிவியல் அறிஞர் லால் மோகன் அவர்களுக்கு செவ்வஞ்சலியையும் அவரை இழந்து வாடும் அவரின் குடும்பத்தாருக்கும் நண்பர்கள் மற்றும் தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் இகக(மாலெ) தெரிவித்துக் கொள்கிறது.

இகக(மாலெ)<br>
தமிழ்நாடு மாநிலக்குழு

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், நாகைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் செல்வராசுக்கு செவ்வஞ்சலி!



கம்யூனிஸ்ட் இயக்க கோட்டையாக விளங்கிய காவிரிச் சமவெளிப் பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராகவும் மக்கள் இயக்கத் தலைவராகவும் விளங்கிய தோழர் எம்.செல்வராசுவின் திடீர் மறைவு பெரும் அதிர்ச்சி அளிக்கிறது. மாணவர் பருவத்திலேயே கம்யூனிஸ்ட் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட தோழர் எம் செல்வராசு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில், பல நிலைகளில் பொறுப்பு வகித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்கும் இடதுசாரி இயக்கத்தின் முன்னேற்றத்துக்கும் பங்களித்துள்ளார்.

தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கையான காவிரி நடுவர் மன்றம் அமைப்பதற்கு முக்கிய காரணமாக விளங்கிய, மாபெரும் மக்கள் இயக்கமான, மனிதச் சங்கிலிப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தியதில் முதன்மைப் பங்கு வகித்தவர் தோழர் செல்வராசு. தோழர் செல்வராசுவின் தொடர்ச்சியான போராட்டங்கள், மக்கள் பிரதிநிதியாக நான்கு முறை வெற்றிபெறச் செய்து அவரை மக்களவைக்கு அனுப்பி வைத்தது.

ஒத்துழைக்க மறுக்கும் உடல்நிலைக்கு மத்தியிலும், பாசிச பாஜக ஆட்சியை தோற்கடிக்கும் முனைப்புடன், நடப்பு மக்களவை தேர்தல் பணிகளில் அவர் தீவிரமாக பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

தோழர் செல்வாரசுவின் திடீர் மறைவு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டுமின்றி இடதுசாரி இயக்கத்துக்கும் உழைக்கும் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

அகில இந்திய அளவில் கம்யூனிஸ்ட் தலைவராக அறியப்பட்ட தோழர் செல்வராசுவின் மறைவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ( மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) மாநிலக் குழு தனது செவ்வஞ்சலியை செலுத்துகிறது.

அவரை இழந்து வாடுகிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அவரது இணையர் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

பழ ஆசைத்தம்பி,<br>
மாநிலச் செயலாளர்<br>
இகக(மாலெ), தமிழ்நாடு

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.05.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 20th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023








Owned and Published by; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh